Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

ஏர் 8 (16-5-66) இதழ் 98

பராபவ வைகாசி 3 பிறை முஹர்ரம் 24 திங்கட்கிழமை

வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

## மேயர் கோரும் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண நகரில் உள்ள சினிமாத்தியேட்டர்களை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து நகரமேயர் திரு அல்பிரட் துரையப்பா ஆலோசனை கோருகிறார் இம்மாத முடிவுக்குள் பொதுமக்கள் தமது ஆலோசனைகளை தமக்கு தெரிவிக்கலாமென அவர் தெரிவிக்கிறார்

# தமிழ்மொழி சட்டவிதிகள் அமுல்நடத்துவது பற்றிய உத்தரவு

## டானுங்கில் கடுமையான சண்டை

### பிரதமர் கீ நேரடியாக நடத்துகிறார்

சைகோன், மே 15

தென்வியட்னுமின் வடக்கு மாகாணமான டானுங்கில் அரசாங்க துருப்புகளுக்கும் உள்ளூர் (கிளர்ச்சி) துருப்புகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருகிறது. டானுங்கில் கேந்திர ஸ்தானங்களை அராங்கத் துருப்புக்கள் கைப்பற்றிக்கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

டானுங் நகரைப் அரசாங்க துருப்புகள் முழுவதுமாக பிடிக்கவில்லையென்று கடைசியாக வெளியான செய்திகள் தெரிவித்தன.

டானுங் நகரைப் பிடிப்பதில் அரசாங்க துருப்புகளும் கிளர்ச்சி துருப்புகளும் தீவிரமாக தாக்குதல் நடத்திவருவதால் பல இடங்களை அரசாங்கத் துருப்புகள் கைப்பற்றுவதும் பின்னர் கைவிடுவதுமாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன, இங்கு அரசாங்க துருப்புகள் வசமான ஒரு பௌத்த பகோடாவை கிளர்ச்சித் துருப்புகள் பின்னர் மீட்டுக் கொண்டனர்.

### 250 பேர் பலி

இதற்கிடையில் சைகோனில் தென்மேற்கே வியட்காங்கியர்களுக்கு எதிராக தென்வியட்னும் அரசாங்க துருப்புகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக நேற்று 250 வியட்காங்கியர்கள் மாண்டனர்.

### வடக்கில் மேலும் தாக்குதல்

வடக்கு வியட்னுமில் அமெரிக்க விமானங்கள் இன்று கடுமையானமுறையில் தாக்குதல்கள் நடத்தின. இன்றையத் தாக்குதல்களினுல் வடக்கு வியட்னுமில் பரவலான சேதம் எற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### முன்வந்த செய்தி

சைகோன், மே 15

தென்வியட்னுமில் கடந்த இரண்டு மாதங்களாக பௌத்தர்களின் வலுக்கோட்டையாக விளங்கிய டானுங் நகரை இன்று அரசாங்கத் துருப்புக்கள் திடீரெனத்தாக்கி கைப்பற்றிக்கொண்டனர்.

ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற சண்டையில் அரசாங்கத் துருப்புக்கள் டாங்கிகளைப் பயன்படுத்தின.

இராணுவத்தலைமைக்காரியாலயம், ரேடியோநிலையம், இதர அரசாங்கக்காரியாலயங்கள் ஆகியனகைப்பற்றப்பட்டன. பிரதம மந்திரி ஏர்மார்ஷல் கீ, டானுங்குக்குப் பறந்துசென்று, இச்சண்டையை நேரடியாக நடத்தியதாய் அறிவிக்கப்பட்டது.

சண்டையில் அரசாங்கத் துருப்புக்களில் 12 பேர் மாண்டனர். எதிர்தரப்புக்கு பலத்தசேதமாம்.

இன்று சைகோனில் 5000 பேர்கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அமெரிக்கத் தூதர் திரு. ஹென்றி கெபொட்லாட்ஜை திருப்பி அனுப்புமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் இதில் வற்புறுத்தினர். திரு. லாட்ஜ் பௌத்தர்களுக்குஆதரவாக இருப்பதாக அவர்கள் கூறினர்.

பௌத்தர்கள், கத்தோலிக்கர்கள்' தொழிலாளர்கள் ஆகியோர் நாளை பொது வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இன்றுபொலிசார் பௌத்தஇளைஞர் ஸ்தாபனத்தை சோதனையிட்டு பல தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றினர்.

## மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில். ஸ்ரீகிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டலாபிஷேக பூர்த்திவிழா இன்றும் நாளையும் நடைபெறும். இன்று விக்கினேசுவர பூஜை, வாஸ்துசாந்தி, சங்குஸ்தாபனம் ஆகிய பூசைகளும், நாளை சங்காபிஷேகமும், மற்றும் பூஜைகளும் இடம் பெறும்.

## சைகோன் மகாநாடு ஒத்திவைப்பு

சைகோன், மே 15

இங்கு நடைபெற இருந்த உலகபௌத்த மகாநாடு, உள்ளூர் நெருக்கடியைத் தொடர்ந்துகாலவரையறையின்றிஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க அதிபர்கள் நடத்தும் ஆலோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்மொழிச் சட்ட விதிகளை அமுல் நடத்தி தமிழ்ப்பேசும் பகுதிகளில் தமிழ்மொழியில் நிர்வாக வேலைகளைச் செய்யவேண்டுமென தமிழ்ப்பகுதி அரசாங்க அதிபர்களுக்கு அரசாங்கம் அனுப்பியிருந்த சுற்றுநிருபத்தின் மீது அரசாங்க அதிபர்கள் தமது இலாகாத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி தமது நிலைபற்றி அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இலாகாத் தலைவர்களுடன் நடத்திய ஆலோசனையின் பின் மொழிபெயர்ப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள் மற்றும் சில ஊழியர்களை புதிதாக எடுக்க வேண்டியது அவசியமென்றும் புதிதாக ஆட்களை எடுக்காதவரை தமிழ்மொழிச் சட்ட விதிகளை அமுல் நடத்துவது சுலபமல்லவென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

அரசாங்க இலாகாக்களுக்கும் கூட்டுஸ்தாபனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்று நிருபமொன்றில் தமிழ்மொழிச் சட்ட விதிகளை. சிங்களச்சட்ட விதிகளை மீருதவகையில், இப்பொழுதுள்ள ஊழியர்களைக் கொண்டே அமுல்நடத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## சைவமதத்துக்கு தலைமைப்பீடம் தேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''ஒவ்வொரு மதத்துக்கும ஒவ்வொரு தலைமைப்பீடம் இருப்பதுபோலச் சைவ மதத்துக்கும் தலைமைப்பீடம் ஒன்றிருக்குமானுல் மதமாற்றம் ஏற்படவும், சமயம் வளர்ச்சியின்றிப் போகவும் வழியேற்பட மாட்டாது. கிராமாபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் மூலமாவது இதை நடாத்தினுல் சைவ சமயத்துக்கு ஒருவித மறுமலர்ச்சியாவது ஏற்பட ஏதுவாகும்.''

கோப்பாய் சூரியோதய சனசமூக நிலைய இளைஞர்களால் கோப்பாய் தெற்கு முடிமன்னர் சிவாலயத்தில் நடைபெற்ற கூட்டுபிரார்த்தனையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் சனசமூக நிலைய [illegible] திரு. சி. எஸ். இளையதம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## கூ. மொ. வி. விசாரணைகமிஷன்

## ஜவுளி இறக்குமதி: உதவிமனேஜர் இரகசியத் தகவல்

கொழும்பு, ஞாயிறு

ஜவுளி இறக்குமதி முழுவதையும் பொறுப்பேற்கும் ஒரு யோசனைகுறித்து கூட்டுறவு மொத்தவிற்பனவுஸ்தாபனம் இப்பொழுது ஆராய்ந்து வருகிறது என்று கூ. மொ வி உதவி ஜெனரல் மனேஜர்திரு எச் எஸ் விஜயரத்ன இன்று காலை கூ. மொ. வி. விசாரணைக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

கூ மொ வி விசாரணைக்கமிஷன்முன் அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்; ஜவுளி இறக்குமதி முழுவதையும் பொறுப்பேற்கும் திட்டம் சம்பந்தமாக கூ. மொ வி ஆராய்ந்துவரும் விஷயம் இரகசியமாக இருந்தபொழுதிலும் இந்த விபரத்தைத் தாம் கூ மொ வி விசாரணைக் கமிஷனிடம் தெரிவிக்கவேண்டியது தமது கடமையென்றும் கூறினுர்.

''இந்தயோசனை கொண்டுவரப்பட்டபொழுது எனது கருத்தும் கோரப்பட்டிருந்தது. ஆனுல் இதற்கு நான் இணக்கம் தெரிவிக்கவில்லை. உடனடியாக இதனைச் செய்வது புத்திசாலித்தனமான நடவடிக்கையாக நான்கருதவில்லை'' என்றும் அவர் கூறினுர்.

## வெப்பநிலை சில தினங்கள் தொடர்ந்து நீடிக்கும்

கொழும்பு, ஞாயிறு

இப்பொழுது நாட்டில்நிலவும் கடும் வெப்பம்மேலும் நீடிக்களாமென்றும் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக்காற்று இந்தநிலையை இம்மாத முடிவுக்குள் மாற்றக் கூடுமென எதிர்பார்ப்பதற்கில்லையென்றும் கொழும்பு காலநிலை அவதான நிலைய அதிகாரி திரு எக்கநாயக்க தெரிவித்துள்ளார். பருவப் பெயர்ச்சிக்காற்று இன்னும் உருவாகாததும் வெப்பக் காற்று இன்னும் நள்ளிரவு வரை நீடிப்பதே இதற்குக் காரணமென்றும் அவர் சொன்னுர். நேற்றுமாலை 7 மணிவரை கொழும்பில் 90 பாகை வெப்பமும் திருகோணமலையில் 99 பாகை புத்தளத்தில்100 பாகையும் வெப்பம் பதிவுசெய்யப்பட்டது.

## இலங்கை ஆட்சேபம்

கொழும்பு, ஞாயிறு

அமெரிக்கா தனது செயற்கை ரப்பர் சேமிப்புக் கிடங்கிலிருந்து கட்டுப்பாடற்ற அளவில் ரப்பரை விற்பதென்று முடிவுசெய்திருப்பதையிட்டு இலங்கை அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்திடம் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

---

புதுடில்லி, மே 15

1966 - 67-ம் ஆண்டில் டெலிபோன் சாதனங்களை இந்தியா வெகுவாக ஏற்றுமதிசெய்யுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

நெடுந்தீவு கிராமசபை அக்கிராசனரால் 1966-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ந் திகதி காலை 9-30 மணி வரையும் நெடுந்தீவு காளாவி மடத்து வேலைக்கு பதியப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் நெடுந்தீவு கிராமசபைக் கந்தோரில் 24-5-66-ந் திகதி நண்பகல் 12 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

3. மற்றும் விபரங்கள் எல்லாம் நெடுந்தீவு கிராம சபைக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

ம. கணபதிப்பிள்ளை,
(ஒப்பம்)
அக்கிராசனர்,
கி. ச. நெடுந்தீவு.

கிராமசபைக் கந்தோர்,
நெடுந்தீவு 12-5-66.

420

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம்காங்கேசன் துறை வீதி, 236 இலக்கக் கடையில் நகை அடைவு பிடிப்பவர் ப. க. பரமநாதன் அவர்களிடம் 31-5-63 தொடக்கம் 31-12-64 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 25-5-66 புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் மேற்படி அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

197




## கொழும்பு
### திங்கள் 16 - 5 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல், 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 திரைஇசை, 1-00 கதம்பஇசை,

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படத்திலிருந்து

இரவு 6-15 கிராமச்சஞ்சிகை, 6-45 இசை அரங்கு மகாராஜபுரம்வி சந்தானம், 7-45 கலையும், கடிதமும், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 எங்கள் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.

## லாயிட்ஜார்ஜ் புதல்வி மரணம்

லண்டன், மே 15

புகழ் பெற்ற முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் திரு. லாயிஜார்ஜின் இளைய குமாரி லாயிட்ஜார்ஜ் சீமாட்டி தனது 65-ம் வயதில் காலமானர். பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு அங்கத்தினர் இ...

## வெளிநாட்டு விளையாட்டு செய்திகள்

'அவதானி'

ஸிட்னி, மே 15

அக்டோபர் மாதத்தில் தென்னுபிரிக்காவில் சுற்றுவிஜயம்செய்யவிருக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியிலிருந்து ஆஸி. கிரிக்கெட் டெஸ்ட் வீரர் டக் வோல்டர்ஸ் வாபஸ் பெற்றுள்ளார்.

தென்னுபிரிக்காவுக்கான ஆஸ்திரேலிய கோஷ்டியில் இருந்து இப்பொழுது வோல்டர்ஸ் வாபஸ்பெற்றுள்ளதன் மூலம் புதிய கிரிக்கெட் வீரர் ஒருவர் இக்கோஷ்டியில் இடம்பெறவிருக்கிருர்.

### கிங்ஸ்டன் விளையாட்டு

கிங்ஸ்டன், மே 15

ஆகஸ்ட் மாதத்தில் இங்கு (ஜமைக்காவில் நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய, காமன்வெல்த் விளையாட்டுக்களுக்கான கட்டட நிர்மாண வேலைகள் இப்பொழுது பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. கிங்ஸ்டன் விளையாட்டுக்களில் இம்முறை முதற்தடவையாக பாட்மின்ரன்போட்டிகள் இடம்பெறவிருக்கின்றன.

விளையாட்டுப்போட்டிகள் ஆகஸ்ட்மாதம் 4-ம் திகதி முதல் 13-ந் திகதி வரை நடைபெறும். இப்போட்டிகளில் இலங்கையும் கலந்துகொள்ளவிருக்கிறது.

### குத்துச்சண்டை மத்தியஸ்தர்

லண்டன், மே 15

இம்மாதம் 21-ம் திகதி இங்கு நடைபெறவிருக்கும் உலக அதிபார குத்துச்சண்டைப் போட்டிக்கு எடின்பரோவைச் சேர்ந்த 55 வயதுள்ள ஜோர்ஜ் ஸ்மித் மத்தியஸ்தராகக் கடமையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் தற்போதைய உலக அதிபர், குத்துச்சண்டை வீரர் காஸியஸ் கிளேயும் பிரிட்டிஷ் "சவால் வீரர்" ஹென்றி கூப்பரும் மோதுகின்றனர்.

1950-ம் ஆண்டில் குத்துச்சண்டை போட்டி மத்தியஸ்தராக நியமிக்கப்பட்ட திரு. ஜோர்ஜ் ஸ்மித் பின்னர் பதவி உயர்வு பெற்று 1964-ம் ஆண்டு இத்துறையில் முதல் வகுப்புக்கு உயர்வுபெற்ருர்.

### பீகிங் போட்டிகள்

பீகிங், மே 15

சீனத் தலைநகர் பீகிங்கில் இம்மாதம் 20-ம் திகதி முதல் 27-ம் திகதி வரை நடைபெறவிருக்கும் பாரம் தூக்கும் போட்டியில் இலங்கையும் கலந்துகொள்ளவிருக்கிறது. இப்போட்டியில் கலந்துகொள்வதற்காக அகிலஇலங்கை உடற்பயிற்சி பாரம் தூக்கும் சங்கம், ஏழு அங்கத்தவர்கள் கொண்ட கோஷ்டி ஒன்றை பீகிங்குக்கு அனுப்பவிருக்கிறது.

நேற்று 15-ம் திகதி இலங்கை கோஷ்டி கொழும்பிலிருந்து புறப்பட்டது. இலங்கை கோஷ்டியில் டபிள்யு எஸ். கே. ஸரோ, மொகமட் நியாஸ் மஜீத், எம். சபாரத்தினம், அன்ரன் டி குறூஸ், எஸ். ஏ. விக்கிரமா ஆகிய வீரர்கள் உள்ளிட்டு ஜின் ரணசிங்கா, டி. எஸ். ஜே. பக்கீர் ஆகியவர்களும் இருப்பார்கள். இக்கோஷ்டியினர் சீனுவின் பல தலைநகர்களில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொண்டுவிட்டுஜூன் மாதம் 15-ம் திகதி தாயகம் திரும்புவார்கள்.

### உலக மல்யுத்த போட்டிகள்

ஒஹியோ, [illegible]

அடுத்தமாதம் 16-ம் திகதி இங்கு ஆரம்பமாகவிருக்கும்

## [illegible]

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கோஷ்டிக்கும், சங்கானை வை. எம். ஏ. கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கோஷ்டியினர் வெற்றியடைந்தனர்.

## போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு இளைஞர் கழகத்தினர் ஆதரவில் நடைபெற்ற 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் வருமாறு:

என். மகேந்திரன் (யாழ்ப்பாணம்), ஆர். இரத்தினம் (புத்தூர்), ரி. கந்தையா (புத்தூர்). முதலாவது இடத்தை அடைந்தவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

# "ஈழநாடு" வெற்றிக்கிண்ண கரபந்தாட்ட இறுதிப் போட்டி

## நாளை தெல்லிப்பழையில் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

"ஈழநாடு" வெற்றிக் கிண்ணத்துக்காக தெல்லிப்பழை ஒ ம்லிபிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் மூன்ருவது வருட கரபந்தாட்டம் சுற்றுப் போட்டியின் இறுதி (தெரிவு) ஆட்டம், நாளை செவ்வாய்க்கிழமை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

"செற் அப"பில் திருக்கோணமலை விளையாட்டுக் கழகமும் வல்வெட்டித்துறை புளுஸ்சும் கலந்து கொள்ளும்.

"பழைய முறை" போட்டியில் கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்னேஸ்வராவும் பங்குபற்றும்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் இப் போட்டிகளுக்கு, பிரதம விருந்தினர்களாக திரு. கு. பாலசிங்கம், சி. சி. எஸ். தம்பதிகள் கலந்துகொள்வார்கள். வெற்றிபெறும் கோஷ்டிகளுக்கு திருமதி பாலசிங்கம் பரிசு வழங்குவார்.

## "ஊக்கம் தேவை"

கோண்டாவில், ஞாயிறு

"மற்றைய நாடுகளோடு இலங்கையை ஒப்பிட்டுப் பார்க்கையில் பொருளாதார வளர்ச்சியில் இலங்கை பின்நோக்கித்தான் இருக்கின்றது. காரணம் நம் நாட்டில் எத்தனையோ கைத்தொழில்கள் செய்யக்கூடிய மூலப்பொருட்கள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்த இன்றைய இளைஞர்கள் தவறிவிடுகின்ருர்கள். எமது அரசாங்கம் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும்பொழுது இன்றைய இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும்."

அளவெட்டி சாமத்தியங்கூட ஒழுங்கை விஸ்தரிப்பு வேலையை சிரமதானமூலம் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மல்லாகம் கிராம சபைத் தலைவர் திரு. வை. இராசதுங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

1966-ம் ஆண்டுக்கான அமெச்சூர் உலக மல்யுத்த சாம்பியன் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இது வரை 24 நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. வெளிமங்கோலியா, பெல்ஜியம், கிழக்கு ஜெர்மன், நோர்வே, ஆஸ்திரியா, இந்தியா ஆகிய நாடுகள் இம்முறை முதற் தடவையாகக் கலந்துகொள்கின்றன. பல்கேரியா, கனடா, பிரிட்டன் பின்லாந்து, கிரீஸ், ஹங்கேரி, ஜப்பான், மெக்ஸிக்கோ, போலந்து, ருமேனியா, தென்கொரியா, சுவீடன், சுவிற்சர்லாந்து, துருக்கி, ஐக்கியஅரபுக்குடியரசு, [illegible] ஆகிய நாடுகளும் கலந்து கொள்கின்றன.

## "உழைப்பவனே உயர்ந்தவன்'

உடுப்பிட்டி, ஞாயிறு

"நிறவெறியும் இனவெறியும் மதபேதங்களும் இன்னும் பிரச்னைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற இவ்வுலகில் அனைவரையும் ஒன்றுபடுத்திச் சமாதான சகவாழ்வு காண்பதையே பஹாய் இயக்கம் விரும்புகிறது. பிறப்பால் நாம் அனைவரும் ஒருவரே. தாழ்த்தப்பட்ட மக்கள் என்று எவரும் கிடையாது. சமூகத்தால் அவ்வாறு ஒதுக்கப்பட்டவர்கள் தாமாகவே கல்வியறிவிலும், நாகரிக வளர்ச்சியிலும் முன்னேற வேண்டும். சலியாது உழைக்கவேண்டும். உழைப்பவனே இன்றைய உலகத்தில் பெரிய மனிதன். ஆஸ்திரேலியாவில் கூலிவேலை செய்பவர்கள்கூட மற்றவர்களுடன் சமமாகவே பழகுகிருர்கள்" என்று ஆஸ்திரேலியாவிலிருந்து வந்துள்ள உலக பஹாய் இயக்க பயனியர் படையைச் சேர்ந்த திருமதி ட்ருமன் பருத்தித்துறை மூன்ரும் குறுக்குத் தெருவில் நடைபெற்ற பஹாய் இயக்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. க. பேரம்பலம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

பாரசீகப் பெண்மணி திருமதி பாசி மிகிருன் பேசுகையில், "உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான மொழியொன்று உருவாக்கப்பட்டால் பின் உலகநாடுகளில் மொழிப்பிரச்னைக்கே இடமிருக்காது என்ருர்.

மலேஷியப் பிரதிநிதி திரு. ஹொன் சுவா, திரு. எஸ். தர்மரத்தினம், திரு. கே. பழனி ஆகியோரும் பேசினர்,

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# வரி விளம்பரம்

## தேவை

**உதவி ஆசிரியர்**

திங்கள் இதழுக்கு உதவியாசிரியர் ஒருவர் தேவை. பிணைப்பணம் ரூபா 500-00. சம்பளம் ரூபா 125-00. நிர்வாகி, தமிழரசி, 253/3, முரசுமோட்டை, பரந்தன். 348

**விவசாய உதவியாளர்**

விவசாய உதவியாளர் தேவை. பரீட்சையில் சித்தியற்ருேரும் விண்ணப்பிக்கலாம். சேதுநகர் தோட்டம், இலுப்பைக்கடவை. 349

**மனேஜர்**

பழத்தோட்டத்திற்கு மனேஜர் தேவை. படித்த வாலிபரும் விண்ணப்பிக்கலாம். விவசாய அனுபவம் அவசியமில்லை. விண்ணப்பியுங்கள். சேதுநகர் தோட்டம், இலுப்பைக்கடவை. 350

## தேவை

**மெசின் மைன்டர்**

பிளேட்டன் மெசினிலும் சிலிண்டர் மெசினிலும் குறைந்தது 5 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. பெரும்பாலும் தமிழர் விரும்பத்தக்கது. கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்குக: நியூலீலா அச்சகம், 33 சென். செபஸ்தியன் மேடு, கொழும்பு-12. 352

**தட்டெழுத்தாளர்**
**கட்டிட மேற்பார்வையாளர்**

ஆங்கில தட்டெழுத்து தெரிந்த பெண்ணும், கட்டிட வேலை மேற்பார்வையாளரும் தேவை. விபரங்களுக்கு சபீலஸ் அன்ட் இன்வெஸ் மென்ஸ், 2-ம் மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 346

## விற்பனைக்கு

**காணி**

யாழ்ப்பாணம் நாவற்குழி ரெயில் ஸ்தானத்திற்கும் மாகாண களஞ்சிய சாலைக்குமிடையே கண்டி வீதியில் அரை ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. குடிசையும் கிணறும் உண்டு. அங்கீகாரம்பெற்ற வீட்டுத்திட்டத்திற்கும் வானொலி உபநிலையத்திற்கும் கிட்டியது. யாழ்ப்பாணம் 10, முதலாம் குறுக்குத்தெரு, பிரக்கிராசியார் இராசதுரைக்கு மனுச் செய்யுக. 336

**காணி**

நாலுபரப்புக் காணி யாழ்ப்பாணம் நல்லூர் குறுக்குத் தெருவில் விற்பனைக்குண்டு. பிரக்கிராசியார் இராசதுரை, 10, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மனுச்செய்யுக. 335

**லொறி மரபொடி**

பாவித்த ஓஸ்டின் 3 1/2 டொன் லொறி மரபொடி மட்டும் விற்பனைக்குண்டு. மில்க் வைற் சோப்தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 343

## நன்றி நவிலல்

எங்கள் திருமண வைபவத்தில் கலந்துகொண்டவர்கட்கும், பரிசில்கள் வழங்கியவர்கட்கும் நல்லாசி அனுப்பியவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம். இங்ஙனம், வி. வன்னியசிங்கமும் (சித்த ஆயுள்வேத வைத்தியர்), பாரியாரும். பன்னலை, தெல்லிப்பழை. 351

## குடியேற்றத்திட்டத்தில் இளைஞருக்குக் காணி

கொழும்பு, ஞாயிறு

வேலையற்றிருக்கும் சுமார் 1300 இளைஞர்களுக்கு குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படவிருக்கிறது. இளைஞர்களுக்கென ஒதுக்கப்படவிருக்கும் இக்குடியேற்றத்திட்டங்களில் அடுத்த மாதத்திலிருந்து காணிகள் வழங்கப்படும்.

## பங்குபற்றவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரி ஏப்ரல் மாதத்தில் இரண்டு ஆஸ்பத்திரிக் குழுவின் கூட்டங்களில் பங்குபற்ற வில்லை யென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோக் மேத்தா சுற்றுலா:

# 'பாகிஸ்தான் ராணுவ செலவை குறைத்தால் நாமும் அப்படிச் செய்வோம்'

## அமெரிக்காவுக்கு இந்தியா அறிவிப்பு

### அன்னிய உதவி ரூ. 4800 கோடி எதிர்பார்க்கப் படுகிறது

புதுடில்லி, மே 15

பாகிஸ்தான் தனது ராணுவச் செலவைக் குறைத்துக்கொள்ளாதவரை, இந்தியா தனது செலவையும் குறைத்துக்கொள்ளாது என அமெரிக்காவிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் தனது ராணுவச் செலவில் மேலும் 115 கோடி ரூபாய் அதிகரிப்பு செய்திருக்கிறதென்றும், ஆனல் இந்தியா 30 கோடி ரூபாய் மட்டுமே கூட்டியிருக்கிறதென்றும் அமெரிக்கத் தலைவர்களிடம் தாம் எடுத்துக் கூறியதாக அமெரிக்காவிலிருந்து திரும்பிய திட்ட மந்திரி திரு. அசோக் மேத்தா பார்லிமெண்டில் கூறினர். இந்தச் செலவும் கூட, பாதுகாப்பு ஊழியருக்கு வழங்கப்பட்ட கிராக்கிப்படி உயர்வினல் ஏற்பட்டது எனத் தாம் கூறியதாயும் அவர் தெரிவித்தார்.

உதவிக் குழுவிடமிருந்து 4-ம் திட்டத்துக்குக் கிடைக்க இருக்கும்பொலிஸ் உதவி பற்றி அநேகமாக உறுதியான உடன்பாடு ஏற்பட்டிருப்பதாயும் அவர் கூறினர்.

விரிவான வெளி உதவி திரட்ட உலக வங்கிமுயலும் என்றும், இது கூடுதலாகவும் இருக்கக்கூடும் என்றும் அசோக்மேத்தா தெரிவித்தார்.

4-ம் திட்ட காலமான ஐந்தாண்டுகளிலும் 4800 கோடி ரூபாய் அந்நிய உதவி தேவைப்படுகிறதென்றும் இதில் உதவிக்குழுவிடமிருந்து 4000 கோடி கிடைக்கும் என நம்புவதாயும் அவர் கூறினர்.

மிகுதியில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து 500 கோடி ரூபாயும், அன்னிய தனியார்களிடமிருந்து 300 கோடி ரூபாயும் எதிர்பார்க்கப்படுவதாய் திரு. மேத்தா குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் தாம் ரஷ்ய உதவி பற்றிப் பேச மாஸ்கோ செல்லவிருப்பதாய்க் கூறிய மேத்தா, பல திட்டங்களுக்கு ரஷ்யா அளிக்கக்கூடிய உதவி பற்றி திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன என்றும், கிழக்கு ஐரோப்பா உதவ விரும்பும் எந்தத் திட்டத்தையும் இந்தியா ஏற்கும் என்றும் கூறினர்.

ஸ்ரீமதி பண்டிட்டை காண:

## 62 வயதான பால்யதோழி நீண்ட பஸ் பிரயாணம்

அடிலெய்ட், மே 15

தென் ஆஸ்திரேலிய நகரமான ரென்மார்க்கைச் சேர்ந்த 62 வயதான ஸ்ரீமதி லோர்ஞடிக், அவரதுபால்ய கால விளையாட்டுத்தோழியான ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டைக் காணும் பொருட்டு 180 மைல் பஸ் பிரயாணத்தை இன்று மேற்கொண்டார்.

65 வயதான ஸ்ரீமதி பண்டிட், இப்போது அடிலெய்ட் வந்திருக்கிருர்.

56 ஆண்டுகளுக்கு முன், சொரூபராணி என்ற விஜயலட்சுமியும் டிக்கும் சிறு குழந்தைகளாக, லக்ஷ்மண புரியில் ஒன்ருக விளையாடினர்கள்.

ஸ்ரீமதி பண்டிட்டும், அவரது அண்ணு ஜவஹரும் அடங்கிய புகைப்படம் ஒன்றை ஸ்ரீமதி டிக் வைத்திருக்கிருர்.

'லக்ஷ்மண புரியிலுள்ள நேரு மாளிகையில் விஜயலட்சுமியுடனும், ஜவஹருடனும் நான் விளையாடிய ஆனந்த நாட்கள் இன்றும் நினைவிலிருக்கின்றன' என அவர் கூறினர்.

''அந்தக்காலத்தில் எனது தந்தை தோமஸ் ஹிக்கின்ஸ் (இப்போது 93 வயது) அரசாங்கப் பங்களா ஒன்றின் பொறுப்பதிகாரியாக இருந்தார்.

நேருகுழந்தைகளின் [illegible]தியான, மிஸ்லிவி ஹூப்பருடன், எனது அன்னையும் இங்கிலாந்திலுள்ள பாடசாலைக்கு வந்திருந்தார். அது முதல் நேரு குடும்பத்துடன் நாங்கள் நேசமானேம். எனதுபெற்ருேர்கள் அடிக்கடி ஆனந்தபவனுக்கு விஜயம் செய்வது வழக்கம்'' என்றும் டிக் கூறினர்.

(பி.டி ஸி.)

## பலப்பரீட்சைக்கு நாகர்கள் தயாராகி வருகிருர்கள்

### 1000 பேர் ஆயுதங்களுடன் குவிந்து கிடக்கின்றனர்

சிம்பால், மே 15

மோர்ட்டார்கள், மெஷின் துப்பாக்கிகள், தானியங்கும் ஆயுதங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஓராயிரம் பகை நாகர்கள், மணிப்பூரிலுள்ள உக்ருல் சப்டிவிஷனில் பரவலாக மையம் கொண்டிருப்பதால் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பகுதி நாகர வந்து சண்டை நிறுத்த ஒப்பந்தத்திற்குள் அடங்கியதாகும். பருவ சமயத்தின் போது, பலப்பரீட்சை ஒன்றில் இறங்க அவர்கள் தயாராகி வருவதாய் அறிவிக்கப்படுகிறது

''தென்பிராந்திய [illegible]மைக் காரியாலயம்,'' சமஷ்டி நாகாலந்து பெயர்களில் அவர்களது நிலைகள், உக்ருவிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள சனகதியில் காணப்படுகின்றன. நம்பாஷி, கச்[illegible] ராக, ஆஸோம் ஆகிய இடங்களில் [illegible] நாகர்கள் நிறுவியுள்ளனர்.

பி.டி ஐ.

## சர்வதேச ஹாக்கி போட்டி

ஹாம்பர்க், மே 15

ஹாம்பர்க்கில் நேற்று இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே நடைபெற்ற சர்வதேச ஹாக்கி போட்டியில் 1—0 கோலினல் இந்தியாவென்றது.

பாகிஸ்தானுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையேநடைபெற்ற மற்ருேர் போட்டியில், மேற்குஜெர்மனி 1—0 கோலினல் வென்றது.

## வினேபாவுக்கு 19158 கிராமங்கள்

இந்தூர், மே 15

வினேபாஜியின் பூதானத்திற்கு, இதுவரை 19158 கிராமங்கள் தானம் வழங்கப்பட்டிருப்பதாக சர்வோதய வட்டாரங்கள் அறிவித்தன.

பீகார் 6133 கிராமங்களையும், ஒரிஸ்ஸா 4720 கிராமங்களையும் அளித்துள்ளன,

(பி. டி. ஐ.)

## சீனத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

ஸ்டொக்ஹோம், மே. 15

சுவீடனிலுள்ள சீனத் தூதராலயத்துக்கு முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சீன அணுகுண்டு வெடித்ததை ஆட்சேபித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## வில்சன் மீது கண்டனம்

லண்டன், மே 15

ஏடனிலுள்ள பிரிட்டிஷ் தளத்தை மூட வில்சன் அரசாங்கம் முடிவுசெய்திருப்பதை, முன்னள் கன்சர்வேட்டிவ் காலனி மந்திரி திரு. சேம் கண்டித்திருக்கிருர். பிரிட்டனின் சர்வதேசக் கடமைகள் இதனல் பாதிக்கப்படுவதாயும், தகுந்த ஒரு பாதுகாப்பு ஏற்பாடுஇன்றி பிரிட்டன் தென் அரேபியாவிலிருந்து வெளியேறமுடியாது என்றும் அவர் கூறினர்.

## அல்ஜீரியா

அல்ஜீயர்ஸ், மே 15

தேசீயமயமாக்கப்படவிருக்கும் வெளிநாட்டார் சுரங்கங்களுக்கு, தகுந்த நஷ்டஈடு வழங்கப்படுமென அல்ஜீரியா அறிவித்திருக்கிறது.

## டோக்கியோவில் 110 லட்சம் பேர்!

டோக்கியோ, மே 15

உலகின் மிகப் பெரிய நகரமாக வளர்ந்திருக்கும் டோக்கியோ இன்று வெளியான புள்ளிவிபரப்படி 1,10,000,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் காட்டுகிறது.

1951-57-ம் ஆண்டுகளில் ஆண்டுக்கு 4 லட்சமாக உயர்ந்த நகர ஜனப் பெருக்கம், குடும்பக்கட்டுப்பாடு காரணமாக இப்போது 2 லட்சமாகக் குறைந்திருக்கிறது.

உலகத்தின் இதர மாபெரும் நகரங்களின் ஜனத்தொகை வருமாறு:

லண்டன் 81,90,000 (1964), நியூயோர்க் 80,70,000 (1963), மாஸ்கோ 63,00,000 (1964)

பி. டி. ஸி.

## ரயில் தளங்கள், மலை கணவாய்கள் நாசம்

### வட வியட்னும் மீது கடும் குண்டு வீச்சு

சைகோன், மே. 15

அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் வட வியட்னமில் இரு பெரிய ரயில் நிலையங்களையும், இரு மலைக் கணவாய்களையும் கடுமையாகத் தாக்கி அழித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

4 விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் அவர்கள் நாசமாக்கினர்.

வியட்காங்கியர் பருவ மழையில் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கும் பொருட்டு ரயில் தளங்களும், மலைக்கணவாய்களும் நாசமாக்கப்பட்டதாயும், சப்ளை பாதைகள் இதனல் துண்டிக்கப்பட்டு விட்டதாயும் அமெரிக்க வட்டாரங்கள் கூறின.

இதற்கிடையில் தென் வியட்னமில், தேர்தலைத் தொடர்ந்து சிவில் அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால், கிளர்ச்சியைச் சமாளிக்க வேண்டும் என பிரபல பௌத்த தலைவர் திரிகுவாங் அரசாங்கத்துக்கு எச்சரித்திருக்கிருர்.

ஆலைத் தொழிலாளர்களை பொலிஸார் மிருகத்தனமாகக் கையாண்டதை எதிர்த்து, நாளை பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளும்படி, தென் வியட்னும் தொழிற் சங்கங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

## தாராசிங்குக்கு விண்ணப்பம்

புதுடில்லி, மே 15

பஞ்சாபிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை விடும்படி உள்நாட்டு மந்திரி திரு. நந்தா மாஸ்டர் தாராசிங்கைக் கேட்டிருக்கிருர்.

## மீஸோக்களும் பகிஸ்தானியரும்

ஷில்லாங், மே 15

மீஸோ தேசிய முன்னணி, பொதுமக்களின் ஆதரவை வேகமாக இழந்து வருகிறது என அஸ்ஸாம் முதல்வர் சாலிஹா அறிவித்தார்.

சமீபத்தில் பீகார் எல்லையில் பாகிஸ்தானியர் ஒரு ரோந்துக்கோஷ்டியைத் தாக்கினர் என்றும், மேற்கு வங்கத்தில் ஊடுருவி ஒரு பொலிஸ்காரரைக் கடத்திச் சென்ருர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

காஷ்மீருக்குள் பாகிஸ்தானியர் மீண்டும் ஊடுருவல் செய்துவருவதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை என்றும், ஜம்மு-காஷ்மீர் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருவதால் கவலைக்கு இடமில்லை என்றும் முதல் மந்திரி சாதிக் கூறியிருக்கிருர்.

## கயானு யு. எஸ். தளம் வாபஸ்

வாஷிங்டன், மே 15

பிரிட்டிஷ் கயானு சுதந்திரம் பெறும் தினத்தன்று, அங்குள்ள தனது விமானத் தளத்தை கைவிட அமெரிக்கா முன்வந்திருக்கிறது. 150 ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி அங்கு முடிவடையவிருக்கிறது.

## சீன, அல்பேனியா கூட்டறிக்கை

பீகிங், மே 1[illegible]

ரஷ்யத் தலைவர்கள் [illegible]ரிக்காவுடன் சேர்ந்து [illegible]னும் மக்கள் கிளர்ச்சி[illegible] நசுக்க முயல்வதாக சீனவும் அல்பேனியாவும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளன.

## மேலும் 60 பேர் மீது விசாரணை

கெய்ரோ, மே 15

ஐக்கிய அராபியக் குடியரசு அரசாங்கத்தைக் கவிழ்க்கவும், ஜனதிபதி நாஸரைக் கொலை செய்யவும் சதிசெய்ததாக முஸ்லீம் சகோதரத்துவஸ்தாபனத்தைச் சேர்ந்த மேலும் 60 பேர் மீது விசாரணை தொடங்கியுள்ளது. இதுவரை மொத்தம் 200 பேர் மீது இதுசம்பந்தமான விசாரணை நடைபெற்றுவருகிறது.

## தொழில் தலைவர்கள் சுட்டுக்கொலை

புவனஸ் அயர்ஸ், மே 15

இரு அர்ஜண்டீன தொழிற் சங்கத்தலைவர்கள் இங்குள்ள ஹோட்டல் ஒன்றுக்கருகில நேற்று சுட்டுக்கொல்லப்பட்டனர். மற்றும் மூவர் காயப்படுத்தப்பட்டனர். சுட்டவர்கள் முன்னள் ஜனதிபதி பெரோனின் ஆதரவாளர்கள் எனக் கூறப்பட்டது.

## ஒரிஸாவில் துன்பம்

புவனேஸ்வரம், மே 15

ஒரிஸாவில் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என அங்கு சுற்றுப்பிரயாணம் செய்துவரும் பிரதமந்திரி ஸ்ரீமதி காந்தி கூறினர். மக்கள் பெருமளவு துன்பமனுபவிக்கிருர்கள் என்றும் அவர் கூறினர். ஒரிஸா ராஜ்யம் உணவுப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் அதிகம் சாப்பிடுவதால் சோம்பேறித்தனம் ஏற்பட்டு, எதைப் பற்றியும் கூர்மையாக சிந்திக்க முடியாமல் போகிறது சாப்பாட்டை சீர்படுத்துவதால், நம் மனம் சுறுசுறுப்பாகி, எதைப்பற்றியும் கூர்ந்து சிந்திக்கக்கூடியதாகும்.

—சுவாமிர ாமதாஸ்

ஈழநாடு

[illegible] National Tamil Daily Post Box [illegible], JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 3 உ (16-5-66)

# போதனு மொழி

மற்ற விஷயங்களிலே என்னகருத்து வேற்றுமை இருப்பினும் தமிழ்க் குழந்தைகளின் போதனு மொழி விஷயத்தில் தமிழ் தலைவர்களிடையே ஒருமனப்பட்ட கருத்து நிலவுவது குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சர் தயாரித்துள்ள புதிய கல்வி மசோதாவிலே குழந்தைகளின் போதனு மொழியைப் பெற்றோர்களே தீர்மானிக்கலாமென்று கூறுகின்றது. மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு இது நல்ல யோசனையாகத் தோன்றக்கூடும். ஆனுல் இதிலுள்ள ஆபத்தை உணர்ந்தே, தமிழ்த் தலைவர்கள் இதை ஆட்சேபித்து, தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் மூலமும் சிங்களக் குழந்தைகளுக்கு சிங்கள மூலமும் கல்வி போதிக்க வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளனர்.

இப்போது ஆங்கிலமுள்ளிட்டு மூன்று மொழிகளில் கல்விப் போதனை நடைபெறுகின்றது. ஆனுல் அடுத்த வருடம் [illegible] ஆங்கில மூலம் போதிப்பதை [illegible]த்திவிடுவதென்று அரசாங்கக் கட்சிகளின் கூட்டத்தில் ஏகோபித்து முடிவுசெய்யப்பட்டுவிட்டது. கல்வி அமைச்சரின் இந்த யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது வரவேற்கத்தக்கதே அந்நியர் ஆட்சியிலே, செய்யப்பட்ட ஒரு கூடாத ஏற்பாடு கைவிடப்படுவதைப் பற்றி யாரும் வருந்துவதற்கில்லை.

ஆங்கிலம் இனி ஒரு போதனு மொழியாக இராததால், இலங்கைப் பள்ளிக்கூடங்களிலே தமிழும் சிங்களமுமேபோதனு மொழிகளாக இருக்கும். இவ்விஷயத்தில் யாரையும் கட்டாயப்படுத்தாமல், பெற்றோர் இஷ்டத்துக்கு மந்திரி கூறுவதுபோல் விட்டுவிடுவதில் என்ன தவறென்ற கேள்வி எழலாம். ஒரு குழந்தைக்கு அதன் தாய் மொழி மூலம் கல்வி கற்பிப்பதுதான் இயற்கை வழி என்றும் கல்வி அறிவு அதனுல்தான் சுலபமாக வரமுடியுமென்றும் உலகக் கல்வியாளர்கள் செய்துள்ள முடிந்த முடிவு. ஆகவே அந்த முறையை மாற்றுவது எந்தக் குழந்தையின் கல்வி வளர்ச்சிக்கும் உகந்ததாகாது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் நன்நன்மைக்கு மாருகத் தீர்மானிப்பார்களா அவர்களின் இஷடத்துக்கு போதனு மொழியை நிர்ணயிக்க விட்டால் என்ன பாதகம் என்று கேட்கப்படலாம். தமிழ்ப் பெற்றோர்கள் தமிழ் மூலமே தங்கள் குழந்தைகளுக்கு கல்வி போதிக்கவேண்டுமென்றுதான் சாதாரணமாகக் கேட்பர். ஆனுல் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத்தவிர பிறபகுதிகளிலே சிறப்பாக மலைநாடு, கொழும்பு முதலிய இடங்களில் தமிழ்ப்பள்ளிக்கூடங்களையும் தமிழ் மூலம் போதிக்கும் வகுப்புகளையும்முந்திய அரசாங்கம் படிப்படியாக மூடிவந்ததால், அங்கு வசிக்கும் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தங்கள் தாய் மொழி மூலம் கற்கக்கூடியவாய்ப்புப்பெரிதும்குறைந்துவிட்டது. பல தமிழ் மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. இஷ்டப்பட்டுத்தான் தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சிங்களப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கின்றூர்கள் என்று சொல்ல முடியுமா?

சிங்கள மொழி கற்பதென்பது ஒன்று, சிங்கள மூலம் கல்வியைக் கற்பதென்பது முற்றிலும் வேறு.சிங்களத்தை இரண்டாவது மொழியாக தமிழ் மாணவர்கள் கற்க இஷ்டப்படலாம் ஆனுல் நிர்வாக யந்திர மூலம் தமிழ்ப் பள்ளிக்கூடங்களையும் வகுப்புகளையும் படிப்படியாக மூடி, தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்கள மூலம் கற்பதைத் தவிர வேறு வழியில்லாமற் செய்வதாயின், அதை நியாய புத்தியுள்ள யாரும் ஒப்பமுடியாது. துரதிருஷ்டவசமாக கல்வி இலாகாவின் சமீப கொள்கை இவ்விதம்தான் இருந்துவருகின்றது.

தாய் மொழியைவிட்டு வேறு மொழி மூலம் கல்வி கற்கும் குழந்தைகள், தங்கள் பண்பாட்டையும், கலாச்சாரங்களையும் கைவிட்டு, இரண்டும் கெட்ட இனமாகி விடக்கூடிய ஆபத்துமுள்ளது. தங்கள் இனத்துக்கு இவ்வளவு ஆபத்து ஏற்படாமல் தவிர்க்கவே தமிழ் தலைவர்கள் ஏகமனதாக இம்முக்கிய விஷயத்தில் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். தமிழரின் உரிமைகளையும் தேசிய ஒற்றுமையையும் பாதுகாப்பதாகப் பன்முறையும் கூறும்பிரதமர் திரு டட்லி சேனநாயகா, இம்முக்கிய விஷயத்திலே, தமிழரின் ஏகோபித்த கருத்துக்கு மாருக அவசரப்பட்டு இப்பொழுதுள்ள ஓர் ஏற்பாட்டைமாற்ற மாட்டாரென்றே நம்புகிருேம்.

## நோயாளிகளை சுமக்கின்றனர்

இரத்தினபுரி, ஞாயிறு

இரத்தினபுரி ஆஸ்பத்திரியிலுள்ள மின்சார 'லிப்ற்' பழுதடைந்துவிட்டதால் மேல்மாடியிலுள்ள எல்லா வார்ட்டுகளுக்கும், நோயாளிகளை சுமந்துசெல்லவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. வாட்டிலிருந்து சிகிச்சை பெறவேண்டிய நோயாளிகளை, கங்காணிமாரும், கூலியாட்களும், சுமந்து செல்கின்றனர். சத்திர சிகிச்சை செய்யப்பட்ட நோயாளிகளும், சுமந்துசெல்லப்படுகின்றனர்

# முல்லையும் துளசியும்

(திருமதி தேவபூபதி நடராஜா, மலாயா பல்கலைக்கழகம்)

சங்ககாலப் புலவர்கள் கற்புடைய மங்கையரை அருந்ததிக்கு ஒப்பிட்டனர். அவர்கள் தம் கற்பின் அடையாளமாக முல்லை மலரைச் சூடினர் என்றும் பாடினர். 'முல்லை சான்றகற்பின் மெல்லியள் குறுமகள்' என்ற தொடர்பைப் பல சங்ககாலப் பாடல்களில் காணலாம். பெண்கள் வீட்டில் முல்லைக்கொடிகளைவளர்த்தனர்என்பதை 'இல்வளர் முல்லை' என்னும் சிலப்பதிகாரத் தொடர் விளக்குகிறது, பிற்கால இலக்கியங்கள் மூலம் மகளிர்வளர்த்த முல்லைக்கொடி முதன் முதலாக அரும்புகள் ஈன்றுல் அதைப்பெறும் விழாவாக இசையோடு கொண்டாடினர்என அறிகின்றேம். சீவக சிந்தாமணியில் 'கற்பு' என்னும் நேர்பொருள் படுமாறு 'முல்லை' என்ற சொல் கையாளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (தானுடைய முல்லையெல்லாந்தாதுகப் பறித்திட்டானே)

இவ்வாறு முல்லையை வளர்க்கும் வழக்கம் தமிழ் நாட்டில் மறைந்து விட்டது. அதற்குப்பதிலாக வீடுதோறும் மாடம் அமைத்து அதில் துளசிச் செடியை வளர்த்துதுளசிமாதா வென விளக்கேற்றி வழிபடும்வழக்கம் வளர்ந்துள்ளது. இதற்குக் காரணம் திருமால் வழிபாடு அல்ல சக்தி வழிபாடே.

பண்டைக்காலம் தொட்டேமகளிர்தம் கணவர் மேற்கொண்ட முயற்சியில் வெற்றிபெற வேண்டிக் கொற்றவையைத் தொழுதனர். அவள் வெற்றி வேண்டிய பாலைநில மக்களின் தெய்வமானுள். வேனிற் காலத்தில் மழைவழமில்லாதுவறண்டகுறிஞ்சி நிலப் பகுதிகளும் முல்லைநிலப் பகுதிகளுமே தமிழ் நாட்டில் பாலையென்னும் படிவம் கொண்டதாகச் சிலப்பதிகாரம் கூறும். ஆகவே அந்நிலப் பகுதிகளில் முருகன், மால், கொற்றவையாகிய தெய்வங்களை மக்கள் வழிபட்டிருப்பர். நாளடைவில் இத் தெய்வங்களுக்கிடையே தொடர்புகளை உண்டாக்கினர். கருமைநிறங்கொண்ட மாலையும், கொற்றவையையும் அண்ணன், தங்கையெனக்கொண்டு போற்றினர்

செம்மையும் இளமையும் கொண்ட குமரனைக் கொற்றவையின் குழவியாக வழிபட்டனர்.

இவ்வாறு திருமாலோடு தொடர்பு படுத்தப்பட்டதும் கொற்றவைக்குத் திருமாலின் படைகளும் உரியவையாகக் கொள்ளப்பட்டன. இதைச் 'சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக்கையேந்தி செங்கணரிமான் சினைவிடமேனின்ருயால்' என்னும் சிலப்பதிகார அடிகள் விளக்குகின்றன. இதைப் போன்றே திருமால் விருப்பத்தோடு அணிந்து கொள்ளும் துழாஅய் மாலையும் கொற்றவைக்குரியதாயிற்று ஆகவே தம் இல்லற வாழ்க்கை வளம்பெற வேண்டுமெனக் கொற்றவையை வழிபட்ட குலப்பெண்கள் அவளுக்கும் உரியதாகக் கருதப்படும் துளசியைவளர்த்து வழிபட்டனர்.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## கீழ்ப்பணியாளரின் அவலநிலை

தட்டெழுத்தறிவுள்ள சிங்கள கீழ்ப்பணியாளருக்கென்றே தனியாக சிங்களத் தட்டெழுத்துப் பரீட்சைகள் 1965, 1966-ம் ஆண்டுகளில் நடைபெற்றிருந்தும் இதே நிலையிலுள்ள தமிழ் கீழ்ப்பணியாளருக்கு தமிழ் மொழி மூலம் ஒரு பரீட்சையாவது நடைபெருமல் இருப்பது அநீதியும், அதிருப்தியானதுமாகும். அரசினர் கீழ்ப்பணியாளர் சேவையில் தமிழ்த் தட்டெழுத்துத் தெரிந்த பலர் தங்கள் கடமைகளுடன் தமிழ்த் தட்டெழுத்து வேலைகளையும் செய்து வருகிருர்கள். ஆகவே அரசினர் சேவையில், தமிழ்த் தட்டெழுத்தாளர் [illegible] அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றதென்பது வெளிப்படை.

1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் திகதி நடைபெற்ற தமிழ்த் தட்டெழுத்தாளர் பரீட்சைக்கு அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவி வகிப்பவர்கள் தோற்றக் கூடியதாக சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் பெறுபேறுகள் வெளிவராத இப்பரீட்சையில் தோற்றிய வாழ்க்கையில் கஷ்டப்படும் தட்டெழுத்துத்தெரிந்த கீழ்ப்பணியாளர்களாகிய எங்களுக்கு (இதுவரை காலமும் தமிழ் கீழ்ப்பணியாளருக்கு தமிழ்த் தட்டெழுத்துப் பரீட்சை நடைபெருதபடியால்) விசேட சலுகை அளித்து தமிழ்த் தட்டெழுத்தாளர்களாக நியமனம் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் அதிகாரிகளும் ஆவன செய்வார்களா?

ஓர் கீழ்ப்பணியாளர்.
யாழ்ப்பாணம்.

## ஏன் இந்த விஷமம்?

சில நாட்களுக்கு முன்பு எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் முத்திரையொட்டப்படவில்லை. ஆதலால் அது ஓர் அரசாங்க கடிதமாய் இருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டேன். பதில் உள்ள இரண்டொரு இலக்கங்களைத் தவிர மற்றவை ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை. என்னுடைய பெயர், முகவரி கூட சிங்களத்திலேயே எழுதப்பட்டிருந்தது. நல்ல வேளையாக தபால் கந்தோரில இருப்பவர்கள் அது எனக்குத்தான் சேர வேண்டியதென்பதை அறிந்து என்னிடம் சேர்ப்பித்தார்கள்.

கள் சீவல் தொழிலாளிகள் தேவை என்ற விளம்பரம் ஒன்றுக்கு சில நாட்களுக்கு முன் நான் விண்ணப்பித்திருந்தேன். இக் கடிதம் அதற்கு மறுமொழியாய் இருக்கக் கூடுமென்று எண்ணுகிறேன். தமிழனுகிய நான் தமிழில் எழுதிய கடிதத்துக்கு தமிழில் மறுமொழி கொடுக்காமல் எனக்கு புரியாத ஒரு மொழியில் ஏன் எழுதினுர்கள் என்பது எனக்கு பெரிய ஆச்சரியமும் ஏமாற்றமுமாயிருக்கிறது.

தமிழ் மொழி விசேஷ சட்டம் என்பதாக சமீபத்தில் எங்கள் பாராளுமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேறியதாம். அதன் பலாபலன்தான் இந்த கடிதமோ?

கே. நாகேந்திரம்.
பட்டினசபை ஒழுங்கை
மானிப்பாய்.

# ஐயாறன் எழுதுவது

கோலாலம்பூரில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் பத்திரிகைக்காரர்களுக்கு இடமே அளிக்காமல் அவர்களை பகிஷ்கரித்துவிட்டார்களாம்! அம்மகாநாட்டைப்பற்றி சிறப்பு மலரை மேலான முறையில் வெளியிட்டு பெரும் தொண்டு செய்த "தமிழ் நேசன்" பத்திரிகைக்கும் கூட அழைப்பில்லையாம்! இதைப்பற்றி அதன் பிரதிநிதி ஒருவர் அப்பத்திரிகையில் எழுதியதைப்படித்தேன். மிக ஏமாற்றமாகவும் வருத்தமாகவும் இருந்தது.

ஃ ஃ ஃ

விசேஷ கட்டுரைகளை ஆங்கிலத்தில் அச்சிட்டிருக்கையில் ஏன் தமிழில் அவற்றை வெளியிடவில்லை என்று ம. பொ. சி அவர்கள் கேட்டதற்கு, கேரளத்தைச்சேர்ந்த மகாநாட்டு நிர்வாகி ஒருவர் மலாயாவிலே சில அச்சுக்கூடங்களே இருப்பதாயும் தமிழ் அச்சுயந்திர சாலைகள் இல்லாததாலேயே இது முடியாது போயிற்றென்றும் ஒரு நொண்டிச் சமாதானம் சொல்லி தப்பப் பார்த்தார்.

ஆனுல் ம. பொ சி விடவில்லை. மூன்று முதல்தரமான தமிழ் தினசரிப் பத்திரிகைகள் மலாயாவில் நடக்கையில், தமிழ் அச்சுயந்திர சாலை இல்லை என்று கூறுவது ஒப்புக்கொள்ளக்கூடியதல்லவென்று சரியாகத்தெரிவித்தார்.

தமிழை சிறப்பிப்பதற்காகக்கூடிய ஒரு மகாநாடே, தமிழில் பல கட்டுரைகளையும் அச்சிடாமல் அலட்சியமாக இருந்த காரணம் என்ன?

முதல்முதலாக உலக சரித்திரத்திலேயே இவ்வித மகாநாட்டை கூட்டி நடத்தியது மிகப்பெரும் பொறுப்பு. அவர்களுக்கும் சிறப்பாக நமது நெடுந்தீவைச்சேர்ந்த தனிநாயக அடிகளாரையும் இதற்காக நன்றியுடன் எவ்வளவு பாராட்டினுலும் தகும். முதல் மகாநாட்டில் இவ்விதமான குறைகள் ஏற்பட்டதில் வியப்பில்லை அடுத்த மகாநாடு சென்னையில் நடக்கஇருக்கிறதாம். அப்போதாவது பத்திரிகைக்காரர்களை பகிஷ்கரிக்காமல் அவர்களையும் அழைத்து கூடுமானவிளம்பரம் கிடைக்கும்படி செய்வதுடன், தமிழிலும் விசேஷ கட்டுரைகளையும், மகாநாட்டு நடைமுறை விபரங்களையும் வெளியிடத்தக்க ஒழுங்குகள் செய்யவேண்டுமென்றே இதை இங்கு எழுதலானேன்.

ஃ ஃ ஃ

நெடுந்தீவு படகுத்துறையிலே நீர் வறண்டுவிட்டதால் 'ராஜேஸ்வரி' மோட்டார் படகு, கடலில் வெகு தூரத்தில் நிற்பதாயும், மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் கடலில் நடந்து கரை வர வேண்டியிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

வெளிஉலகத்துடன் நெடுந்தீவு மக்களுக்கு உள்ள ஒரே தொடர்பு இந்தப் படகுத்துறை மூலம்தான் இந்தத் துறையும் பயன்படாமல், அம்மக்கள் எவ்வளவு காலம் கஷ்டப்பட வேண்டுமோ! தூரத்திலே எங்கோ உள்ள தீவு என்று அரசாங்க அதிபர் அலட்சியமாக இல்லாமல், இதைஉடனே கவனித்து படகுத்துறையை ஆழமாக்கி, அம்மக்களின் சங்கடத்தைக் குறைக்கவேண்டும்.

அத்தீவிலுள்ள மக்கள்குடி தண்ணீர், போக்குவரத்து முதலிய பலகஷ்டங்களுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிகள் விடுதலை; சாட்சிக்கு எச்சரிக்கை

## இராமநாதபுரம் கொலை, பெண் கடத்தல் வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

இராமநாதபுரம் கொலை, பெண்கடத்தல் வழக்கு நேற்று மூன்றும் நாளாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இவ் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தஆறு எதிரிகளையும் நீதியரசர் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

காலஞ்சென்றவரின் மகனை சண்முகத்தின் சாட்சியம் நம்பக்கூடியதாக வில்லை என ஜூரிமார்கள் ஏகமனதாக, விசாரணை நடுவில் தெரிவித்தபோது நீதியரசர் அதனை ஏற்றுக்கொண்டு அவர் கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காக அவருக்கு தண்டனை அளிக்கப்படவேண்டுமென்றும் வயது குறைவாகவுள்ளதால் அவ்வாறு செய்யாது விடுவதாகவும் எச்சரிக்கை செய்தார்.

இவ்வழக்கில்64-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ம் திகதி இராமநாதபுரத்தில், வைரவநாதர் ஆறுமுகத்தான் மகள் பூரணத்தை, தகப்பனின் சட்டபூர்வமான பாதுகாப்பிலிருந்து, வைத்திலிங்கம் தனுஷ்கோடி, கதிரவேலு நடராசா, கதிரவேலு துரைசிங்கம், வைத்திலிங்கம் சண்முகம், ஜோசப் அருள் பிரகாசம் ஆகியோர் கடத்திச்சென்றதாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில் ஆறுமுகத்தை, 1-ம் எதிரி வைத்திலிங்கம் தனுஷ்கோடி கொலைசெய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஜே ஏ. பி. செரியும், அட்வகேட் கே. ரி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும், திரு. ஏ. ரி. ஜி பிரிட்டோ, திரு. ஆர். டி. சிவகுரு ஆகியோரின் அனுசரணையுடம் ஆஜரானர். அட்வகேட் எஸ். சிவானந்தன் 1-ம் எதிரிக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

2-ம் 4-ம், 5-ம், 6-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், புறக்டர் தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

3-ம் எதிரிசார்பில் அட்வகேட் வி. என். நவரத்தினம் புறக்டர் பி ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடன் ஆஜரானர். 3-ம் எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எஸ். சிவானந்தன் நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் 19-ம் திகதி ஆரம்பமாகும்.

(ந. நி)

# தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தின் மந்தம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ் பல்கலைக்கழக இயக்கமும் சபையும் மேலும் அங்கத்தவர்களைச் சேர்க்கவோ அங்கத்தவ பதவியிலிருந்து விலகியவர்களைச் சேர்த்துக் கொள்ளவோ எந்தவித முயற்சிகளும் எடுக்கவில்லையென தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தின் சபை தனது 7-வது ஆண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

1963-ம் வருடம் டிசம்பர் முதல் திகதியிலிருந்து 1965-ம் வருடம் டிசம்பர் 31-ம் திகதிவரையான கால எல்லைக்குள் நடைபெற்ற விஷயங்களை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் உப்பு வெளியில் விவசாய பயிற்சி, கால்நடைப்பயிற்சி அளிக்கும் நிலையம் அமைக்கும் முயற்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்ட பின்னரே மேலும் அங்கத்தவர்களை சேர்த்து. அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என எண்ணப்பட்டதாலேயே இவ்வித தேக்க நிலை ஏற்பட்டது என விளக்கம் தரப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நிலையம் அமைப்பதில் இப்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அங்கத்தவ பதவியைப் புதுப்பித்து இப்பயிற்சி நிலையத்தை அமைத்து வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்க உதவுமாறும் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து வாக்காளர் அப்பீல்

யாழ்ப்பாணம், திங்.

1965-ம் ஆண்டு தேர்தல் வாக்காளர் பட்டியலிலிருந்து தங்கள் பெயர்கள் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து கிளிநொச்சித்தொகுதியைச் சேர்ந்த தருமபுரம் வாசிகள் 540 பேர் தாக்கல் செய்திருந்த மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து அவர்கள் உயர் நீதிமன்றத்தக்கு அப்பீல் தாக்கல்செய்துள்ளனர்.

இத்தகவலை மனுதார்சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஸி. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

540 பேரின் மனுக்களில் 51 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் 491 மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் இவற்றை ஆட்சேபித்து அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## இளம் ஆராய்ச்சியாளர்களுக்குப் போட்டி!

ஹாம்பர்க்(டாட்) மே15

பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயிற்சிபெறுவதற்கு முன்னர் இளம் விஞ்ஞான ஆராய்ச்சி மாணவர், மாணவிகளின் திறமையைச் சோதிப்பதற்காக, ஹாம்பர்க் நகரில் ஒரு போட்டி நடக்கிறது. இளம்மாணவர்களின் திறமையைக் கண்டு, முதுவிஞ்ஞானிகள் வியக்கின்றனர். கொழும்புதிராவகத்தின் 'முதிர்ச்சி' நிலையை நிபுணயிக்க ஓர் எளியமுறையை கண்டுபிடித்த மரியா என்ற 20வயதுமாணவிக்கும், 1200 மணிநேரம் உழைத்து மிகவும் சின்னஞ்சிறு [illegible]னிக் கம்யூட்டன் [illegible] மொன்றை உருவாக்கிய ஹில்பிராண்ட் என்ற 19 [illegible] பரிசு வழங்கப்பட்டன.

(யூபிஎஸ்)

## வாகசா திருநாள்

கோண்டாவில், ஞாயிறு

"சைவசமயம் வரட்சியுற்ற சூழ்நிலையிலே அதற்கு புத்துயிர் அளிக்கத்தோன்றினர் திருநாவுக்கரசு நாயனர். அவர் தோன்ருது விடுவாரேயானல் சைவம்இன்று தலைபோங்கியிருக்குமென்று கூறுவது அசாத்தியமாகும்" என இணுவில் சைவமகாஜனகல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசு நாயனர் சுவாமிகளின் குருபூசை விழாவில் திரு. த. கந்தையா கூறினர்.

'நாவுக்கரசர் தமக்க நேர்ந்த இடர்களை சிவசத்தியால்தாங்கினர். இதிலிருந்து நாம் பெறக்கூடியதென்னவென்றல் கடவுளை நம்பினேர் ஒரு பொழுதும் கைவிடப் படுவதில்லையென்பது தொண்டுகளில் சிறந்தது ஆலயத்தொண்டு. திருநாவுக்கரசரும் இறுதி மூச்சுவரை உழவாரப்படை தாங்கி ஆலயத்தொண்டு புரிந்துவந்தார். அதன் பயனக இறைவனை அனுபவங்களால் கண்டார்" என்றும் அவர் தொடர்ந்து பேசியபோது குறிப்பிட்டார்.

விழா அன்னதானத்துடன் இனிது முடிவடைந்தது.

---

## புதுமையான டெலஸ்கோப்

ஸ்டட்கார்ட் (டாட்) மே15

மத்திய தரைக்கடலில் காப்ரி தீவில் அமைந்துள்ள சூரிய மண்டல ஆராய்ச்சி நிலையத்தில், 12,50,000 ரூபா மதிப்புள்ள புதுமையான 'டெலஸ்கோப்' ஒன்றை மேற்கு ஜெர்மன் நிறுவனம் அமைத்துள்ளது. சாதாரணமாக தொலைநோக்கிக் கருவி, ஒரு பெரிய கூண்டுக்குள் அமைந்திருக்கும். கூண்டுக்குள் உஷ்ணக்காற்று திரண்டு, சூரியனைத் துல்லியமாகப் படமெடுக்கவும் பார்க்கவும் இடைஞ்சல் செய்யும். இதைத்தவிர்க்கும் முறையில் புதுமையான 'டெலஸ்கோப்' தனியாக உயரமான இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. காற்று வேகத்தில் தொலைநோக்கி கருவி சிறிதும் அசையாமல் இருக்கும் வகையில், ஒரு நீண்டகூண்டுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

(யூ பி எஸ்)

---

## மிதிபலகை பிரயாணம் 9 பேருக்கு அபராதம்

கொழும்பு, ஞாயிறு

மிதிபலகையில் பிரயாணம் செய்த ஒன்பது பேர்களுக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் தலா 20 ரூபா அபராதம் விதித்தார்.

பஸ்ஸில் மிதிபலகையில் பிரயாணம் செய்த ஒன்பதுபேரும் நேற்று மருதானையில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் சிலர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இலங்கை போக்குவரத்து சபை சார்பில் ஆஜரான திரு. அன்ரூடி சில்வா, மிதிபலகை பிரயாணம் தடைசெய்யப்பட்டபின், இலங்கை முழுவதும் சபையின் வருமானம் 28,000 ரூபா அதிகரித்துள்ளதெனக் கூறினர்.

முதல் தடவையானபடியால் குறைந்த அபராதம் விதிப்பதாகவும், இனிமேல் மிதிபலகையில் பிரயாணம் செய்யவேண்டாமென்றும் நீதிபதி தீர்ப்பளிக்கும்போது கூறினர்.

# "யு. என். பி. - தமிழரசுக்கட்சி வேறுபாடு கிடையாது"

## தமிழரசுத் தலைவாகள் விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

தமிழரசுக்கட்சிக்கும் யு. என். பிக்கு மிடையில் கருத்துவேறுபாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்ட செய்திகள் தவருனவையென தமிழரசுக்கட்சித் தலைவர்களான எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக டாக்டர் நாகநாதன் தெரிவிக்கையில் நல்லூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் தாமும் கட்சியின் மற்ற தலைவர்களும் தெரிவித்த சில கருத்துக்கள் சில தனிப்பட்ட நபர்களால் திரித்துக் கூறப்பட்டுள்ளது என்றும் அக்கூட்டத்தில் திரு செல்வநாயகம் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் ஐக்கியதேசியக்கட்சியில் தாம் சேர்ந்துவிடவில்லையென்றும் கட்சியின் கொள்கைகளைக் கைவிட்டுவிடவுமுல்லையென்றும் ஆனல் இலங்கையில் உள்ள சகல மக்களின் நலன் கருதி யு. என். பி. யுடன் தேசியஅரசாங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளதாக தெரிவித்தாரென்றும் குறிப்பிட்டார்.

குறிப்பாக முந்திய அரசாங்கத்தினல் தமிழருக்கு மறுக்கப்பட்ட சில அடிப்படைஉரிமைகளைப் பெறுவதற்காகவே தேசியஅரசாங்கத்தில் சேர்ந்ததாக தெரிவிக்கப்பட்டதாக டாக்டர் நாகநாதன் எடுத்துக் கூறினர்

திரு எஸ் ஜே வி இதுபற்றித் தெரிவிக்கையில் அக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சி யு என் பி கூட்டு தமிழர்களுக்கு எதுவிதத்திலும் ஆபத்து ஏற்படுத்துவதாக இருந்தால் தாம் அக்கூட்டிலிருந்து விலகிவிடுவோமென்றும் தெரிவித்ததாகக் கூறினர்

இதில் 'ஆபத்து ஏற்படுவதாக இருந்தால்' என்ற வார்த்தை உற்றுநோக்கப்படவேண்டிய ஷயம் என திரு எஸ் ஜே சுட்டிக்காட்டினர்

இரு சமூகங்களுக்கிடையிலும் நல்லுறவு ஏற்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி டாக்டர் நாகநாதன் கூறியுள்ளதாவது:

இலங்கை சுதந்திரமடைந்த தினம்முதல் துரதிஷ்டவசமாக சிங்கள-தமிழ் சமூகங்களுக்கிடையே நிலவிவந்துள்ள ஒற்றுமையின்மை எமது நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துவந்துள்ளது எமது வாழ்க்கையும் இதனல் சீர்குலைந்துள்ளது. எமது கலாச்சார ஆன்மீக துறைகளின் வளர்ச்சி தடைப்பட்டுள்ளது

இலங்கையில் நிரந்தரமான சமாதானத்தை உருவாக்குவதன் மூலம்தான் நமது பொருளாதாரவளர்ச்சியையும் ஏற்படுத்தலாம் இதன் மூலம் நமது கலாச்சாரத்தையும் வளர்ச்சியுறச் செய்யலாம்

தமது சொந்த அரசியல் நோக்கங்களுக்காக மத வேற்றுமைகளையும் தூண்டிவிடுபவர்கள் தேசத்துரோகிகளாகக் கணிக்கப்படவேண்டும்

---

## கி. மு. சங்க கருத்தரங்கு

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவு கிராமமுன்னேற்றச் சங்கங்களினதும் மாதர் சங்கங்களினதும் கருத்தரங்கு இம்மாதம் 8-ம் திகதியில் இருந்து 10-ம் திகதிவரை மூன்று நாட்களாக நடைபெற்றது

இக் கருத்தரங்கில், கிராமத்தின் கடமைகள், நாட்டு வளர்ச்சி, சமூகமுன்னேற்றம், எங்கள் [கி]ராமம், கூட்டுமுறை மனிதவாழ்கைக்கு கிராமமுன்னேற்றச் சங்கங்களின்உதவிகள் ஆகிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

இக் கருத்தரங்கில் நெடுந்தீவு வைத்திய அதிகாரி திரு. எஸ் வேதநாயகம், சுகாதார பரிசோதகர், கூட்டுறவுப் பரிசோதகர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாகியுள்ளனர். அரசாங்கம் எப்போது கண்திறக்குமோ தெரியவில்லை. அம்மக்கள், சிரமதானமாக இதைச்செய்யமுன்வந்தால், தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொண்டவர்களுடன், அதிகாரிகளும் தங்கள் கடமையை உணர்ந்து வேண்டியதைச் செய்யக்கூடும். தீவுப்பகுதி எம் பி இதை உடன் கவனிப்பாரா?

ஃ ஃ ஃ

வம்பின் மலர்க் குழலுமையாள் மணவாளன் காண் மலரவன் மால் காண்பரியமைந்தன்தான்காண், கம்பமதக்கரி பிளிறவுரிசெய்தோன் காண் கடல் நஞ்சமுண்டிருண்ட கண்டத்தான்காண், அம்பர் நகர்ப் பெருங்கோயில் அமர்கின்ருன்காண் அயவந்தியு[ள்]ளான் காண் ஐயாறன் கா[ண்], செம்பொ[ன்] னெனத் திகழ்கின்ற வுரு[வன்] தான் காண்சிவனவன்கா[ண்] சிவபுரத்தெஞ் [செல்வ]ன் தானே.

—அப்பர் சுவா[மிகள்]

---

## வயோதிபரின் துணிச்சல்

அம்பலாங்கொடை, ஞாயிறு

நள்ளிரவில் எரிந்துகொண்டிருந்த குடிசையிலிருந்து ஒன்றரை வயது குழந்தை உட்பட மூன்று பெண்களையும், 3 குழந்தைகளையும், அறுபது வயதான சில்வா என்ற தச்சுத் தொழிலாளி காப்பாற்றியுள்ளார். இச்சம்பவம் தலவத்தையில் நிகழ்ந்துள்ளது

---

## புதிய ஒலிபரப்பு

புதுடில்லி, மே 15

இன்று முதல் இந்திய வானெலி உருது, வங்காளி மொழிகளில் புதிய ஒலிபரப்புக்களை ஆரம்பித்திருக்கிறது உருது மொழிக்கு 9 மணி நேரமும் வங்காளிக்கு 7 1/2 மணி நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது

---

## கி. ச. ச. தலைவர் ராஜினமா

யாழ்ப்பாணம், திங்கள்

ஏழாலை கிராமசபைத்தலைவர் திரு. செல்வநாயகம் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

---

## 'பிக்குகளுக்கு கூப்பன் வேண்டாம்

பத்தேகம, ஞாயிறு

பிக்குகளுக்கு பங்கீட்டரிசி புத்தகம் வழங்குவதை நிறுத்தும்படி அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளும் தீர்மானம், கொட்டாவ கிராம சபையில் ஏகமனதாக நிறைவேறியது, இக் கூட்டம் திரு ஜி ஜெபசேன தலைமையில் நடைபெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசிய பவுண்டேஷன் நிதி உதவி
## இலங்கை சட்ட உதவி சபைக்கு கிடைக்கும்

கொழும்பு, சனி

சட்ட உதவி சபைக்கு விரைவில் ஆசிய பவுண்டேஷன் ஸ்தாபனத்திடமிருந்து நிதியுதவி கிடைக்கவிருக்கின்றது.

சட்ட உதவி பெறமுடியாத பொதுமக்களுக்கு இலவச சட்ட உதவிகள் அளிக்கும் இந்த ஸ்தாபனம் இதுவரை சிவில் வழக்கு விஷயங்களில் மட்டுமே சட்ட உதவிகள் அளித்து வந்துள்ளது. இனிமேல் குற்றப்பிரிவு வழக்குகளுக்கும் சட்ட உதவிகள் அளிக்குமென்று தெரிகின்றது. இந்த ஸ்தாபனம் இலங்கை சட்ட நிபுணர்கள் சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இச்சபைக்கு அரசாங்கமும் ஏராளமாக உதவிபுரிந்து வந்துள்ளதென்று இச்சபையைச் சேர்ந்த ஒரு பிரமுகர் கூறினார்.

## திருநாவுக்கரசர் குருபூஜை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பகுதியிலுள்ள கல்லூரிகள் பாடசாலைகளில் திருநாவுக்கரசுநாயனார் குருபூஜை நடைபெற்றது. பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெற்ற குருபூஜையில், கூட்டுப்பிரார்த்தனையும் இ. ஆறுமுகத்தின் சொற்பொழிவும் இடம்பெற்றன. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் பண்டிதை நா. பாக்கியம் அ. ஆறுமுகம் ஆகியோரின் சொற்பொழிவும், திரு. மு. கிருஷ்ணபிள்ளையின் பண்ணிசையும் நடைபெற்றன. பண்டத்தரிப்பு [illegible]களிர் கல்லூரி உட்பட மற்றும் சில கல்லூரிகளிலும் குருபூஜை நடை[illegible]ன.

ஃ ஃ

நீர்வேலி, ஞாயிறு

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை நீர்வேலி ஸ்ரீவிநாயக சன சமூக நிலையத்தில் இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் 13-ம் திகதி கொண்டாடப்பட்டது. கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றது,

ஃ ஃ ஃ

சுன்னாகம், திங்கள்

மயிலணி சைவ வித்தியாசாலை சுன்னாகம் தில்லையம்பல மண்டபத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திரு. மா. குமாரசுவாமி, பண்டிதர் ச. கந்தசாமி, பிரம்மஸ்ரீ சோ. சோமாஸ்கந்தசர்மா ஆகியோர் திருநாவுக்கரசு சுவாமிகளைப் பற்றி உரையாற்றினர்.

---

## சிரமதானம்

பருத்தித்துறை, சனி

அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் பருத்தித்துறைக் கிளையினர் சிரமதானமூலம்பருத்தித்துறைப் பகுதியிலுள்ள சுடுகாடுகளையும் இடுகாடுகளையும் பல பொதுக்கிணறுகளையும் திருத்தும் வேலையைச் செய்துள்ளனர்.

தொண்டர்கள் மத்தியில் நகரசபைத்தலைவர் பேசுகையில் கூறியதாவது:

"எங்கள் ஊர்களில் அரசினர் உதவியை நம்பியிருப்பது மிகவும் பிழையான காரியம். ஆஸ்பத்திரிகளைக் கட்டி அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் உதவக் கூடியவர்கள் எமது ஊரில் இருக்கும்போது சிறு விஷயங்களை நாம செய்வதில புதினமொன்றுமில்லை".

## "சைவத்துக்கு புத்துயிர் ஊட்டியவர்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சமணசமயத்தில் சேர்ந்த திருநாவுக்கரசரைப் பீடித்த சூலைநோயை நீக்கச் சமணர்கள் தம்மால் இயன்றவரை முயன்றும் முடியவில்லை. ஈற்றில் திருநாவுக்கரசர் நோய் தாங்கமுடியாது விபூதி தரித்துச் சிவபிரானைத் துதித்துப்பாடியபோது சூலைநோய் நீங்கியது. திருநாவுக்கரசருக்குச் சிவபிரான் அருள் கிடைத்தது. பாம்பு கடித்து இறந்த பிள்ளையை உயிர்பெற்றெழ செய்ததுடன் பல அற்புதங்களையும்செய்து சைவசமயத்துக்குப் புத்துயிரூட்டிச் சமணர்களிடமிருந்து சைவசமயத்தைக் காப்பாற்றிய திருநாவுக்கரசுநாயனாரை நினைவு கூரும்பொருட்டு அன்னாருடையகுருபூசையை கொண்டாடவேண்டியது சைவசமயத்தவர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்."

இவ்வாறு கொழும்புத்துறை கிழக்கு துரையப்பா வித்தியாசாலையில் நடைபெற்ற திருநாவுக்கரசுநாயனார் குருபூசையின் போது தலைமையாசிரியர் திரு. இ. செல்வராசா பேசுகையில் குறிப்பிட்டார். ஆசிரியர்கள் திரு. பொ. பூரணம் பிள்ளை, திரு. ந. பஞ்சாட்சரம், திருமதி வா. சண்முகநாதன், செல்வி மு. மங்கையர்க்கரசி, மாணவன் மா. கமலநாதன் ஆகியோர் திருநாவுக்கரசு நாயனாரைப் பற்றிப் பேசினார்கள். ஆசிரியை மு. மங்கையர்க்கரசியினால் திருநாவுக்கரசரின் பாடல்கள் பாடப்பட்டன.

---

## கஞ்சா கைப்பற்றப்பட்டது

சுழிபுரம், சனி

சங்கானை மேற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள காலையடி கிராமத்தில் ரூபா இரண்டாயிரத்துக்கு மேல் பெறுமதியான கஞ்சா சங்கானை கலால் பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. காலையடியிலுள்ள சில இல்லங்களிலிருந்து இக்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து கலால் பகுதியினர் இப்பிரிவில் தீவிர கவனம் செலுத்துகின்றனர்.

---

## 'ஈழநாடு' செய்திக்கு கைமேல்பலன்

சுழிபுரம், ஞாயிறு

'புயலுக்கு வந்த வள்ளம்' என்ற தலைப்புடன் 'ஈழநாட்'டில் வெளியானசெய்தி கைமேல் பலனைக் கொடுத்துள்ளது. கடந்தவாரம் கல்லுண்டாய் உப்பளத்துக்கு அருகாமையில் ஒரு வள்ளம் புயலினால் வந்து கரைசேர்ந்து ஒருவராலும் சொந்தம் பாராட்டப்படாது பலநாட்கள் அப்படியே கரையோரத்தில்கிடந்தது. இதன் செய்தி 'ஈழநாட்'டில் வெளியானதைத் தொடர்ந்து வேலணையைச் சேர்ந்த ஒருவர் தக்க சான்றுகளுடன் வந்து தனது வள்ளத்தை எடுத்துச்சென்றுள்ளார்.

---

## டாஷ்கண்டில் 10 பேர் பலி

டாஷ்கண்ட், மே 15

டாஷ்கண்டில் நேற்று ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் 10 பேர் கொல்லப்பட்டு, 100-க்கு மேலானோர் காயமடைந்தனர் என அறிவிக்கப்பட்டது.

## பிறந்த குழந்தை இறந்த மர்மம்

காலி, ஞாயிறு

ஜோன் நோனா இம்மாதம் 7-ந் திகதி ஒரு பிள்ளையை பெற்றிருந்தார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் பொலிஸார் வயல் பகுதியில் ஒரு குழந்தையின் சடலத்தை கண்டெடுத்தனர். பொலிசார் பின்னர் அப்பெண்ணை கைதுசெய்து, பிள்ளையை பிரேத பரிசோதனை செய்தனர். விசாரணையின் போது குழந்தை இறந்து பிறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இம்மாதம் 19-ந் திகதி உடுகம மாஜிஸ்திரேட் கோர்ட்டில் இப்பெண்மேல் குழந்தையின் பிறப்பை மறைத்ததாக குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்படவிருக்கிறது

---

## பூமி அதிர்ச்சி

டோக்கியோ, மே 15

மத்தியஜப்பானில் நேற்று பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சேதம் பற்றி விபரம் அறிவிக்கப்படவில்லை.

## பஸ் சேவை பற்றி மகஜர்

உடுப்பிட்டி, ஞாயிறு

வசாவிளானுக்கும் அச்சுவேலிக்கு மிடையே இரட்டைத்தட்டு பஸ்வண்டிகளைச் சேவைக்கு விடும்படிகோரும் மகஜரொன்றை அச்சுவேலி இளைஞர் இயக்கம் இ. போ. ச. யாழ். பிரதேச சபைக்கு அனுப்பிவைத்துள்ளது. மேற்படி பாதையில் பஸ்போக்குவரத்துப் போதாது என்றும், இரட்டைத்தட்டு பஸ்ஸை சேவைக்கு விடுவதன்மூலம் பிரயாணிகளின் கஷ்டத்தைத் தீர்க்கமுடியும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வருடாந்த உற்சவம்

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 24-ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. தொடர்ந்து திருவிழா நடைபெறும் பத்துத் தினங்களுக்கும் வண்ணை முத்தமிழ்மணி

## அவசரகாலத்தை ரத்துச் செய்க

புதுடில்லி, மே 15

இந்தியாவில் அவசர்கால நிலையை ரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரி பார்லிமெண்ட் எம். பி.க்களான பிரபல வழக்கறிஞர்களும், இதர பிரபல வழக்கறிஞர்களும் உள்நாட்டு மந்திரி திரு. நந்தா, சட்ட மந்திரி ஆகியோரைக் கேட்டுக்கொண்டனர்.

## யு. எஸ். கொள்கை கண்டனம்

வாஷிங்டன், மே 15

அமெரிக்காவின்வெளிவநாட்டுக் கொள்கையை திரு. வெயின் மோர்ஸ் உட்பட, 3 பிரபல செனட்டர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

---

திரு. சி. எஸ். எஸ். மணி பாகவதர் 'மகாபாரதம்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.


7 ரூ. நிறையுள்ள கண்ணான கண்ணன்



அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்




ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாறாத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும், விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் குழந்தைகள் பெலனான சுக வளர்ச்சி பெறுகிறார்கள்.

ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ-அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபால் பெட்டி 23, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் இலங்கை சிறுவரின் ஓவியக்காட்சி

லண்டன், மே15

கிளையறன்ஸ் இல்லத்தில் இவ்வாரம் நடைபெற்றசிறுவர் ஓவியக் கண்காட்சி ஒன்றை அரசமாதா கண்டு களித்தார். அவர் பார்வையிட்ட பன்னிரண்டு ஓவியங்களுள் ஒன்று, ஏழு வயதுச் சிறுவனான பிலிப் அலெக்ஸ்ஸான்டரால் வரையப்பெற்றது. இச்சிறுவன் கொழும்பு அமரசேகராக்கலைக் கல்லூரியைச் சேர்ந்தவனாவான்.

லண்டன் கில்ட் மண்டபத்தில் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்றறோயல் அகடாமிச் சிறுவர்களினஓவியக் கண்காட்சியில் வைக்கப்பெற்ற சித்திரங்களைத் தெரிந்து அரசமாதாவின் பார்வைக்கு அனுப்பியிருந்தார்கள்.

பிலிப்பினது ஓவியம்'விளையாட்டரங்கம்' என்றபெயருடன் பார்வைக்கு வந்திருந்தது.

பிரிட்டனிலும், வெளி நாடுகளிலும் உள்ள பள்ளிக்கூடச் சிறுவர்களால் வரையப்பெற்ற 4,000 ஓவியங்களை மேற்கண்டவாறு, கண்காட்சியாக நடாத்தியது றோயல் ஓவியக்கழகமாகும். இறுதியாக நடைபெற்ற தெரிவில் 11 நாடுகளிலிருந்து வந்த ஓவியங்களும் இடம்பெற்றன. இவை மொத்தம் 206 ஆக இருந்தன. இந்த ஓவியங்கள் யாவும்மண்டபத்தைபொன்மயமாக்கிக் கொண்டிருந்தன. அவற்றுள் அமரசேகராக் கலைக்கல்லூரிக்குக் குறிப்பிடத்தக்களவு பரிசுகள் கிடைத்தன.

இக்கழகத்துக்குரிய பரிசான 'வெண்கலத் தாரகை' 17 வயதான கிறிஸ்டின் இராஜரத்தினம்என்றமாணவிக்கு வழங்கப்பெற்றது. குலவுதல்", 'வெஸாக்குக்கு ஆயத்தம்', 'தாளக்காரர்' ஆகிய மூன்று ஓவியங்களுக்கும் இப்பரிசு கிடைத்துள்ளது. இக்கல்லூரியின் ஏனைய மாணவர்கள் எட்டுப் புத்தகப் பரிசுகளைப் பெற்றவேளை, இம் மூன்று ஓவியங்களும், பிலிப்பினுடைய சித்திரமும் உயர்வான பாராட்டுதல்களைப் பெற்றன.

பிரிட்டன், கனடா, கானு, ஹொங்கொங், இந்தியா, ஜமாய்க்கா, கென்யா, மொறிஷியஸ், நேபாளம், ஐக்கியநாடுகள் ஆகியவற்றிலிருந்து வந்த ஓவியங்களுடன் போட்டியிட்டே இந்தப் பரிசுகளை மேற்குறிப்பிட்ட ஓவியங்கள் பெற்றன.

இது கழகத்தால் நடாத்தடபெற்ற 71-வது ஓவியக் கண்காட்சியாகும். 1888 முதல்கொண்டு இத்தகைய காட்சிகள் இடம் பெற்றுவந்துள்ளன. இதனை தோமஸ் ஆப்லெட் கண்டுபிடித்தார். இவர் நவீன சித்திரத்துக்கு (புதுமுறைச் சித்திரம்)துக்கு வழிகாட்டியவர். இந்தக்கழகம் இலாபநோக்கமற்றதாகும்.

---

## 20 சதத்துக்கு ரூபா 750

காலி, ஞாயிறு

இரண்டு பற்றறிகளை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க இருபது சதம் கூடுதலாக விற்றதற்காக உடுகம மாஜிஸ்திரேட் திரு. டி. ரி. எப். பி. சேனநாயகா, ஐ. கே. அமரதாசா என்றவர்த்தகருக்கு ரூபா 750 அபராதம் விதித்தார். கோர்ட் முடியும்வரை அவர் சிறையில் வைக்கப்பட்டார்.

## நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

அரசாங்க செளக்கிய தொழில் நுட்ப ஊழியர் சங்க எட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இங்கானே மேற்கு அரசடி சனசமூக வாசிகசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. எம். ஆர். ஈ. சிறிவர்த்தன தலைமையில் நடைபெற்றது. பலமுக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. எம். ஆர். ஈ. சிறிவர்த்தன, உபதலைவர்; திரு. எஸ். கெட்டியாராச்சி, காரியதரிசி: திரு. டி. ஜே. கெட்டியாராச்சி, உபகாரியதரிசி: திரு. எஸ். விமலசேன, தனதிகாரி: திரு. எஸ். இராமலிங்கம் ஐந்து பேர்கொண்ட நிர்வாகசபை உறப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## வைத்திய சாதனை

ரோம், மே 15

இத்தாலிய வைத்திய நிபுணர்கள் குரங்கின் குண்டிக்காய் ஒன்றை 23 வயது இளைஞன் ஒருவனுக்குப் பொருத்தி வெற்றிகண்டிருக்கிறார்கள். இளைஞன் இப்போது நற்சுகமுடன் இருக்கிறான்.

---

## நூல்நிலையங்கள்

கொழும்பு, சனி

நாட்டின் பல பாகங்களிலும் இடத்துக்கிடம் கொண்டுபோகக்கூடிய நூல் நிலையங்களை நிறுவுவதற்கு கலாசார இலாகா முடிவு செய்துள்ளது.

தற்பொழுது கொழும்பில் இம்மாதிரி நூல்நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும்.

## கல்விக் கருத்தரங்கு

சாவகச்சேரி, ஞாயிறு

'சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் பள்ளிக்கூடங்களில் இன்று கல்வி நிலை குன்றியிருப்பதற்குரிய காரணங்களும் அவற்றை நீக்குவதற்கேற்ற வழிகளும்' என்ற தலைப்பில் ஒரு கல்விக் கருத்தரங்கொன்று இம்மாதம் 18-ம் திகதி காலை 9 மணிக்கு நிகழவிருக்கிறது.

இக் கருத்தரங்கில் திருவாளர்கள் க. கனகசபாபதி, எஸ், ஹன்டி பேரின்பநாயகம், கே. நேசையா, ஏ. எஸ். கனகரத்தினம் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

---

## 19 பேர் போட்டி

பாணந்துறை, ஞாயிறு

வாதுவ பட்டின சபையின் தேர்தல் இம்மாதம் 25-ந் திகதி நடைபெறும் எட்டு வட்டாரங்களில் பத்தொன்பது அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
எம்.ஆர். ராதா-எம்.என். ராஜம்
நடித்த
ரத்தக் கண்ணீர்

REGAL--JAFFNA
NOW SHOWING!
Victor Mature - Richard Burton
in
THE ROBE
(Cinemascope-Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி — சரோஜாதேவி
நடித்த
ஆலயமணி

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி



செண்டில்
கோம்பா (வேப்பம்) சோப்

களங்கமற்ற சுத்தமான தோற்றம் பொலிவுடன் திகழ கோம்பா சோப்பைப் பாவியுங்கள். கோம்பா அதன் கிருமி நாசினித்தன்மைக்காக பல்லாண்டுகளாக கீழ்நாட்டு அழகிகளால் பாராட்டப்பெற்று வருகிறது. பழைய காலத்தில் கோம்பாவின், பட்டை, இலைகள். வேர் முதலியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட ஒருவகைப்பசை தோலுக்குப் பாதுகாப்பு அளிப்பதில் நிகரற்றது எனக் காணப் பட்டது.

* நீங்கள் உபயோகிக்கும் கோம்பா சோப்பில் அதே துணைப் பொருட்களுடன், குளோரோபில். அக்டமர் ஆகிய ரசாயனப் பொருட்களும் சேர்க்கப்பட்டுள்ளன.
* இந்த ரசாயனப் பொருட்கள் தினசரி குளிப்பின் பின் உங்களுக்கு குளிர்மையையும், புத்துணர்வையும் ஏற்படுத்துகின்றன.
* எப்பொழுதும் கோம்பா சோப்பையே பாவித்து மினுமினுப்புள்ள தோற்றத்துடன் வாழ உறுதி செய்து கொள்ளுங்கள்.



இது சுவதேசி இன்டஸ்றியல் வேர்க்ஸ்
லிமிடெட்டாரின் ஓர் தயாரிப்பு

GRANTS 50

டெலிபோன்: 7099

இப்பொழுது கிடைக்கும்
கூப்பன் இல்லை
கியூ இல்லை
பூப்போட்ட வோயில் சேலைகள்
14/50 சதம் மட்டும்
ஆளுக்கு ஒன்று மட்டும்
விற்று முடிவதற்குள் நீங்கள் விரும்பியதைத் தெரிவு செய்யுங்கள்.
ரொலரூம்ஸ்,
46, மெயின்வீதி யாழ்ப்பாணம்.

டெலிபோன்: 7099
டெலிபோன்: 7099
டெலிபோன்: 7099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேஷிய தகராறு

# மந்திரிகள் கட்டத்தில் பேச்சுக்கள்

## இந்தோனேஷியா அறிவிப்பு

### துங்குவை சந்திக்கவும்தயார் என்கிருர் சுகர்ணே

ஜாகர்த்தா, மே 15

**இந்தோனேஷிய அதிபர் சுகர்ணேவின் மாளிகையில் இன்று பகல் நடைபெற்ற உயர்தர மகாநாடு ஒன்றுக்குப் பின்னர் மலேஷியாவுடஞன இந்தோனேஷிய எதிர்ப்புக்கொள்கையில் தீவிர மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.**

மலேஷிய எதிர்ப்புக்கொள்கையை முடிவுக்குக் கொண்டுவரும் முதல் நடவடிக்கையாக உருப்படியான சில யோசனைகளை இந்தோனேஷிய அரசாங்கம் இப்பொழுது வெளியிட்டிருக்கிறது.

இந்தோனேஷிய - மலேஷிய வெளிநாட்டுமந்திரிகள் நேரடியாகச் சந்தித்துத் தகராறுகள் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டுமென்றும் இதனைத் தொடர்ந்து உயர்கட்டத்தில் சந்திப்பு நிகழவேண்டுமென்றும் இந்தோனேஷிய அரசாங்கம் யோசனை வெளியிட்டுள்ளது.

அதிபர் சுகர்ணேவின் கோடைகால விடுமுறை மாளிகையில் இன்று நடைபெற்ற மகாநாட்டில் உயர் ஆலோசகர்களும் இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். மகாநாடு சுமார் நான்குமணி நேரம் வரை நடைபெற்றது. தீவிரமான விவாதத்துக்குப் பின்னர் சமாதான யோசனைகள் வெளியிடப்பட்டதாக இங்கிருந்து வெளியாகும் ஏஜென்ஸி செய்திகள் கூறுகின்

...ணே அறிவிப்பு

...இதற்கிடையில் இந்தோனேஷிய அதிபர் சுகர்ணே இன்று விடுத்த விஷேச செய்தியொன்றில் மலேஷியப்பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானை நேரில் சந்திக்கத் தாம் ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

#### கோலாலம்பூரில் வரவேற்பு

இந்தோனேஷிய அரசாங்கத்தின் புதிய சமாதான நோக்கங்கள் கோலாலம்பூரில் வெகுவாக வரவேற்கடபட்டுள்ளன

#### இராணுவ அதிகாரி கருத்து

இந்தோனேஷிய இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் மலேஷியாவை நசுக்கும் கொள்கையை இந்தோனேஷியா கைவிடவில்லை என்றும் ஆனல் பேச்சுவார்த்தைகளுக்கான சமாதானக்கதவு திறக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினர்.

#### துங்கு மகிழ்ச்சி

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணேவின் கோரிக்கையை மலேஷியப் பிரதமர் துங்குஅப்துல்ரஹ்மான் மகிழ்ச்சியுடன் ஏற்றுள்ளார்.

பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் இன்றிரவு விடுத்த செய்தியொன்றில் டாக்டர் சுகர்ணேவைச் சந்திக்கத் தாம் மிகவும் ஆவலாக இருப்பதாகவும் அவரின் சமாதான நோக்கத்தை மனப்பூர்வமாக வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

---

## மித்திய ஆபிரிக்கா ஒரு வைரச் சுரங்கமாகிறது

### வீடு வாசல்களை விட்டு மக்கள் வைரம் தேடுகிருர்கள்

லண்டன்,மே15

மத்திய ஆபிரிக்காவில் ஆபிரிக்கர்கள் தங்கள் வீடு வாசல்களை விட்டு ஓடி, வைரம்தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்,

காட்டு கிராமமான கன்ஞட் என்னும் ஊர் இதற்கு நிலைக்களஞக இருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன் அமெரிக்கா,பிரெஞ்சு, இஸ்ரேலிய கம்பெனிகள் வைரம்காணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

ஆனல் 1961-ம் ஆண்டுக்குப்பின் வைர ஏற்றுமதி 10மடங்குஅதிகரித்து விட்டதால் பெரும் பணக்கார நாடாக அது உருவெடுத்து வருகிறது. 640 லட்சம் டாலர் வைரஏற்றுமதி ஆண்டு தோறும் அங்கு நடைபெற்றுவருகிறது.

சட்டவிரோதமாக கோடிக்கணக்கான டாலர் பெறுமதியான வைரங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது

இதேபோல், மத்தியகிழக்கிலுள்ள குவாய்த் என்னும் சிறியநாடு, எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டதால் திடீரென பணக்காரநாடாகிறது.

---

## மிதிபலகை பிரயாணத்தடை

### எம். பிக்கள் கண்டனம்

சிலாபம், ஞாயிறு

மேலதிக பஸ்களை சேவைக்குவிடாமல் மிதிபலகை பிரயாணத்தை தடைசெய்த இலங்கை போக்குவரத்துச் சபை தலைவரின் நடவடிக்கையையிட்டு, உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களில் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்,

உள்நாட்டமைச்சின் உதவி மந்திரி திரு எஸ் டி எ ஜெயசிங்கா, தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் ஈ எம் வி நாகநாதன் ஆகியோர் மேலதிக பஸ்சேவைகளிஞலேயே பிரச்னையைத் தீர்க்கலாமெனத் தெரிவித்துள்ளனர்.

---

## சம்பள நிர்ணய சபைகள்

கொழும்பு, ஞாயிறு

அரிசி ஆலைகளிலும், இரத்தினக்கல் நிலையங்களிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கெனச் சம்பளநிர்ணயசபைகள் அமைப்பது பற்றித் தொழிலமைச்சு ஆலோசித்துவருகின்றது.

---

## அபூர்வ கருவி

ஸ்டட்கார்ட் (டாட்)மே15

'கொழு கொழு' என்று இருக்கும் பன்றியை எப்போது கொல்வது நல்லது? பன்றியின் விலாப்பகுதியில் எந்தச் சமயத்தில் கொழுப்பு குறைவாகவும் இறைச்சி அதிகமாகவும் இருக்கும்? இதைக் கண்டுபிடிக்க ஒரு அதிசயமான கருவியை மேற்கு ஜெர்மனியில் ஸ்டட்கார்ட் அருகே விவசாயக் கல்லூரியில் கண்டுபிடித்திருக்கிருர்கள். கடலின் ஆழத்தை 'எதிர் ஒலி' மூலம் கண்டுபிடிப்பதுபோல, ஒலியின் மூலமே பன்றியின் தசையின் கனம், தோலின் கனம் ஆகியவற்றை இக்கருவி துல்லியமாகக் கணக்கிட்டுக் காண்பிக்கிறது.

பன்றியின் கழுத்தில் இக்கருவியை மாட்டிவிட்டால், இறைச்சியின் கனம், தோலின் கனம் ஆகியவற்றை கருவியிலுள்ள ஒரு 'முள்' துல்லியமாக சென்டி மீட்டர் கணக்கில் காட்டிவிடும்.

(யூ. பி, எஸ்.)

---

## பிரதமருக்கு வரவேற்பு

கம்பளை, ஞாயிறு

கம்பளை நகரசபை பிரதமருக்கு ஜூலை 16-ம் திகதி ஒரு பகிரங்க வரவேற்பு அளிப்பதென அதன் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

---

## கிராமகோர்ட்டு பதில் நீதிபதி

சாவகச்சேரி, ஞாயிறு

சாவச்சேரி கிளிநொச்சி தொகுதிகளிலுள்ள கிராமக் கோடுகளின் பதில் நீதிபதியாக புறக்டர் எஸ். கந்தசாமி கடந்த 8-ம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

---

## தேசிய கல்வி அபிவிருத்திக்கு நூதன சாலைகளின் பணி

### கல்வி மந்திரி பேச்சு

கொழும்பு, ஞாயிறு

தேசியக்கல்வி அபிவிருத்திக்கு நூதன சாலைகள் பெரும்பணி ஆற்றமுடியுமென்று கல்விமந்திரி திரு. ஐ. எம் ஆர். ஏ. இரியகொலை இன்று நூதனசாலைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்றை ஆரம்பித்துத்வைத்துப் பேசுகையில் கூறினர்.

நூதனசாலைகள் வெறும் காட்சிச்சாலைகளாக மட்டுமல்ல நாட்டின் சரித்திரத்தை எடுத்தியம்பும் ஸ்தாபனங்களாகவும் அவை விளங்கவேண்டுமென்று மந்திரி குறிப்பிட்டார்.

நூதனசாலைகள் இலாகாவால் நடத்தப்படும் இக் கருத்தரங்கம் இரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

கல்விப்பகுதியின் பதில் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் குருகே பேசுகையில் நூதனசாலைகள் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு எவ்வளவுதூரம் உதவமுடியுமென்பது பற்றி ஆராயவே இக் கருத்தரங்கம் நடத்தப்படுகிறதென்றும், கருத்தரங்கில் ஏராளமான தலைமை ஆசிரியர்கள் கலந்துகொள்வது ஊக்கமளிப்பதாகஇருக்கிறதென்றும் கூறினர். வித்தியோதய பல்கலைக்கழக உபவேந்தர் வஜ்ரஞான நாயக்கதேரோ உட்பட வேறு பலரும் பேசினர்கள்

---

## வர்த்தகர்மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஞாயிறு

தனதுவீட்டில் விபசார விடுதி நடத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டதன் மீது கொழும்பு பிரபல வர்த்தகர்களில் ஒருவரான யூசுப் ஆதம் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட்முன் இன்று காலை ஆஜரானர்

---

ஒரிசா

## வறட்சிப்பகுதியை இந்திரா பார்வையிட்டார்

புதுடில்லி, மே 15

ஒரிஸாவுக்கு மூன்றுநாள் விஜயஞ்செய்திருந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று புதுடில்லி திரும்பினர் இவருடன் ஒரிஸா முதன்மந்திரியும் வந்துள்ளார்.

ஒரிஸா ராஜ்யத்தில் பிரதமர் இந்திரா வறட்சி நிலவிய 12 பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்.

பதம்பூர் விமானநிலையத்தில் இன்று காலை பிரதமர் பேசுகையில் ஒரிஸாவில் நடவடிக்கைகள் எதுவும் பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாததால் இப்போது இந்நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும் துரிதமாக நடைபெற்றுவரும் நிவாரண வேலைகள் இங்குள்ள நிலைமையைச் சமாளித்துவிடுமென்றும் கூறினர்.

ஒரிஸாவுக்கு மேலும் நிவாரணஉதவிகள் குறித்து தாம் முதன்மந்திரியுடன் ஆலோசனை நடத்தப்போவதாகப் புதுடில்லியில் அவர் தெரிவித்தார்.



வியட்னமில் வியட்காங்குயரின் தாக்குதலுக்கும் அமெரிக்கரின்தாக்குதலுக்கும் உள்ளாகி வியட்னும் மக்கள் படும் அல்லல் கொஞ்சமல்ல. வியட்காங்கியரிஞல் கைது செய்து அழைத்துச் செல்லப்பட்ட ஒரு வியட்னமியர்,அவரை மீட்க தென் வியட்னும் அரசாங்கவிமானம் ஒன்று தென்பட்டதும் வியட்காங்கியரிஞல் சுட்டுக்கொல்லப்பட்ட பரிதாபக் காட்சியை இப்படம் காண்பிக்கிறது.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி ... இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org